688

ஜகன்மோகினி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
31 AUG 1949
MADRAS
688
3-49

ஜயபேரிகை

மாடியிலிருந்து ஒரு ரூபாய்காசைப் பிச்சைக் காரிக்குப் போட்டுவிட்டு, அவ ளினிய கானத்தைக் கேட்டுக்கொண்டே நிற்கையில் பேய்க் கூச்சல் போடுவது போல் பெரிதாக இரைந்துகொண்டு ஒரு பெரிய……… ……………(ப-38)

(ப-38)

திகைப்பு!
வியப்பு!

MUG 26, 7

1—8—1949. 26-வது ஆண்டு. அணா நான்கு

ஆசிரியை: வை.மு.கோதைநாயகி அம்மாள்.

ஆடித்திங்கள்

இந்த மாதம்

தக்ஷிணாயண புண்ய காலத்தைத் துவக்கும் இந்த மாதத்தில் அவதரித்தவர்கள் இருவரே— ஆண்டாளும், ஆளவந்தாரும். நம்மை ஆட்கொள்ள வந்த இவ்விருவர் பெருமையும் வாசாமகோசரம்.

ஆண்டாள்

பிராட்டியின் அம்சமாய், திருத்துழாய்ச் செடியின் அடியில் பெரியாழ்வார் திருக்கையில் திருவாடிப்பூரத்தன்று கிடைத்தவள். ஆழ்வார்கள் பதின்மருடைய ஞானபக்தி வைராக்யங்கள் அவ்வளவும் திரண்டு ஓர் பெண்ணுருவெய்தியவள். திருவரங்கனுக்குப் பூமாலை சூடிக்கொடுத்தும் பாமாலை பாடிக்கொடுத்தும் மகிழ்வித்த ஆண்டாள் வைபவத்தை மோஹினி வாசகர்கள் ஏற்கெனவே பலபடியாலும் அநுபவித்ததுண்டு.

“இன்றோ திருவாடிப் பூரம் எமக்காக
அன்றோ இங்கு ஆண்டாள் அவதரித்தாள்—குன்றாத
வாழ்வான வைகுந்த வான்போகந்தன்னை இகழ்ந்து
ஆழ்வார் திருமகளாராய்.”

* * *

அஞ்சு குடிக்கு ஒரு சந்ததியாய் ஆழ்வார்கள்
தஞ்செயலை விஞ்சிநிற்கும் தன்மையளாய்—பிஞ்சாய்ப்
பழுத்தாளை ஆண்டாளைப் பத்தியுடன் நாளும்
வழுத்தாய் மனமே மகிழ்ந்து.”

* * *

திருவாடிப் பூரத்தில் ஜகத்துதித்தாள் வாழியே!
வண்புதுவை நகர்க்கோதை மலர்ப்பதங்கள் வாழியே!

ஆளவந்தார்

பரமாசார்யரான நாதமுனிகளின் திருப்பேரனாக ஆடி ஸ்ரீ உத்திராடத்தன்று திருவவதரித்த ஸ்ரீ யாமுனாசார்யருக்கு, சிறு பிராயத்தில் சபாபண்டிதனை வென்று ராணியின் வாக்கை நிறைவேற்றியதால் ஆளவந்தார் என்ற காரணப்பெயர் அவளால் சூட்டப்பட்டது. இது பிரசித்த சரித்திரம். உபயவேதாந்தங்களிலும் கரைகடந்த ஞானமும் கவிதாசக்தியும் நிறைந்த இவ்வாசார்ய ஸார்வபௌமரைப்பற்றி எம்பெருமானாரே “அடியேன் ஆளவந்தாருடன் சேர்ந்திருக்கப் பெற்றேனாயின் பரமபதத்திற்குப் படிகட்டியிருப்பேன்!” என்று ஸாதித்தருளியதிலிருந்து இவரது பெருமை நன்கு விளங்கும். இவரது விசேஷ கடாக்ஷமே எம்பெருமானாரின் ஈடிலாச் சிறப்பிற்குக்காரணம். மந்த்ரங்களுள் ரத்னம் ‘த்வயம்’; புராணங்களுள் ரத்னம் ஸ்ரீவிஷ்ணுபுராணம்; அதேபோல் ஸ்தோத்திரங்களுள் ரத்னம் ஆளவந்தார் ஸ்தோத்திரமே! அவரது அவதார தினத்தன்று அந்த ஸ்தோத்ர ரத்னத்தை அநுஸந்தானம் செய்வதே சிறந்த விழாக்கொண்டாட்டமாகும்.

ஆளவந்தார் தாளிணைகள் அனவரதமும் வாழியே!

— ஸ்ரீவைஷ்ணவ தாஸன்.

OFFICE ... 1949

ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.
— திருவள்ளுவர்

ஜகன்மோகினி யென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோகினி! மனத்தைச் சார்ந்து.
— வீராகவ கவி

Vol. 26.	விரோதி ஞு,	சுதந்தரா சகாப்தம்	August.
No. 8.	ஆடி மீ	25-ம் திங்கள்.	1949.

காற்றினிலே வரும் வாக்கு.

காற்றினிலே வரும் வாக்கு காற்றுடன் அடித்துக்கொண்டு போகாமல் காதினுள் புகுந்து, உள்ளத்தில் பதிந்து, செயலில் பரிமளிக்கவேண்டும். ஆயிரக்கணக்கான வருடங்களுக்குமுன் ஸம்ஸ்க்ருதத்தில் ஒலித்த உபநிஷத்வாக்யங்கள் தற்போது ஆங்கிலத்தில் ஆகாசவாணிமூலமாக மகான்களின் வாயினின்றும் வெளிப்பட்டு நமது கடமையை நினைப்பூட்டுகின்றன.

மூன்று விரதங்கள்

"அன்னம் பஹு குர்வீத. தத் வ்ரதம்" என்ற வாக்யமும், "அன்னம் ந நிந்த்யாத். தத் வ்ரதம்" "அன்னம் ந பரிசக்ஷீத. தத் வ்ரதம்" என்ற வாக்யங்களும் தைத்திரீயோபநிஷத்தில் (ப்ருகுவல்லியில்) காணப்படும் முக்யமான உபதேசங்கள். அவற்றின் பொருள் யாதெனில், "அன்ன உற்பத்தியைப் பெருக்கு; எந்த உணவையும் நிந்திக்காதே; அன்னத்தைச் சிறிதும் வீணாக்காதே! இவற்றையே வ்ரதமாகக்கொள்" என்பதே.

பரம்பரையாக வரும் தத்துவம்

ஜன சமுதாய நலனை உத்தேசித்து, சுமார் மூவாயிரம் வருடங்களுக்கு முன்னமேயே நம் புண்ய பூமியில் இத்தகைய முக்யமான உபதேசங்களை நமது மகான்கள் செய்திருக்கிறார்களெனின், இன்றுள்ள ஜனத்தொகை—உணவுப்ரச்னை நெருக்கடியில் நமது ஞான திலகங்களான நேருஜியும் ராஜாஜியும் இதே கருத்துக்களை ரேடியோமூலம் மக்களுக்கு வெளியிடுவதில் ஆச்சரியமேது? நம் நாட்டில் பரம்பரையாக வந்துகொண்டிருக்கும் தத்துவங்கள்தானே இவை! ஆனால், மக்கள் தத்தம் கடமையிலிருந்து நழுவுவதால் அவர்களை உபதேசத்தாலே திருத்தவேண்டியிருக்கிறது.

சமுதாய நன்மை

ஷி. உபநிஷத்திலேயே, (சீக்ஷாவல்லியில்) கீழ்க்கண்ட உபதேசமும் காணப்படுகிறது; "குசலான் ந ப்ரமதிதவ்யம்; பூத்யை ந ப்ரமதிதவ்யம்—அதாவது, சமுதாய நன்மையை அலக்ஷியம் செய்யாதே; அனைவரின் மங்களத்தையும் அலக்ஷியம் செய்யாதே!" என்பதே. வாழ்வில் அவச்யம் அநுஷ்டிக்கப்படவேண்டிய தர்மங்களையே மகான்கள் எப்போதும் உபதேசிக்கிறார்கள். உபநிஷத் காலத்தில் உபதேசிக்கப்பட்ட தத்துவங்கள் இந்த நவநாகரீக காலத்திலும் பொருந்தும்.

தத்துவமும் பிரத்யக்ஷமும்

ஆனால், உபநிஷத் காலத்தில் இதையே தத்வ த்ருஷ்டியுடன் "அன்னமே ப்ரஹ்மம்; அன்னத்திலிருந்தே எல்லா ஜந்துக்களும் உற்பத்தியாகின்றன; அன்னத்தாலேயே அவை உயிர் வாழ்கின்றன; சரீர வியோகத்திற்குப் பிறகு மீண்டும் அன்னமாகின்றன" என்றும், "அன்னத்தைப் பழிக்காது, வீணாக்காது, அதன் உற்பத்தியைப் பெருக்கி, அதிதியை உபசரித்து, ஜனசமுதாய க்ஷேமத்திற்காக உழையுங்கள்" என்றும் உபதேசித்தனர். இந்த காலத்திலோ ப்ரத்யக்ஷ நிர்ப்பந்தங்களைக் கருத்திற்கொண்டு எல்லாம் 'சாண்கும்பி'யின் பொருட்டே உபதேசிக்கின்றனர். இது காலவிசேஷத்தினால் ஏற்பட்ட வித்தியாஸமேயெனினும் மக்களின் கடமை அன்றும் இன்றும் ஒன்றே!

சென்ற இதழில் இது விஷயமான கீதா பாஷ்யத்தைக் குறிப்பிட்டு 'அன்னசக்கரம்', 'மண்சக்கரம்' என்ற இரு தத்துவங்களையும் விளக்கினோமல்லவா? அதையும், இங்கு குறிப்பிட்டுள்ளவையையும் மனத்திற்கொண்டு நம் நேருஜி, ராஜாஜி வாக்குகளைக் கவனிப்போமாயின் கீழ்க்கண்ட கடமைகள் தெளிவாகும்.

கடமைகளை உணர்வோம்

(1) அரிசிதான் உயர்ந்த உணவு, மற்றவை மட்டம் என்று எந்தவித உணவையும் பழிக்கலாகாது.

(2) அரிசியேதான் வேண்டுமென்ற பிடிவாதத்தால் வேறு உணவை வீணாக்கலாகாது; அரிசியையும் அதிகமாக உபயோகத்திற்கெடுத்து வீணாக்கக்கூடாது.

(3) வாழைப்பழம் முதல் உயர்ந்தரக சம்பா அரிசிவரை அன்ன வகையில் சௌகரிய சாத்யங்களுக்குத்தக்கபடி அதிகமாக உற்பத்தி செய்யவேண்டும்.

(4) நமது சொந்த உற்பத்தி அதிகரித்து, வெளிநாட்டிலிருந்து உணவு இறக்குமதி நின்றபோனால் எல்லா விலைவாசிகளும் குறைந்து, [illegible] ஏற்பட்டு, நமது சமுதாயம் சுபிட்சமடையும்.

(5) உபதேசத்தால் ஏற்பட்ட உணர்ச்சி, செயலைத் தூண்ட வேண்டும். அவரவர் தத்தம் நிலைக்கேற்றபடி லட்சிய சித்தியில் ஈடுபட்டு உழைக்கவேண்டும்.

—வை. மு. ஸ்ரீ.

183152

வந்தனம்

சாமா ராகம் — ஆதி தாளம்

வந்தனம் இந்தியத் தாயே—இந்த
மாநில ரக்ஷகி நீயே
சுந்தரப் பொன்முகத் திருவே—ஆத்ம
சுதந்தர சக்தியின் உருவே! (வ)

கண்குளிர் கற்பக வனமே—இன்பக்
கனிரசம் பொழிந்திடும் வனமே
மண்குளிர் மங்களக் கதிரே—எங்கள்
மனங்குளிர் ஆனந்த மதியே! (வ)

கருணைக் குழலிசைக்கும் பண்ணே—இந்தக்
காசினி போற்றிடும் விண்ணே
மரண பயம் ஒழிக்கும் மருந்தே—கலை
மல்கிய வாழ்க்கையின் விருந்தே!—ஜய (வ)

ஜயகீதம்

எக்காள ராகம் — முத்தாளம்

ஜயம் ஜயம் பெருகவே—எம்
ஜன்ம பூமி வாழ்கவே.
துயர் கெடச் சுதந்தரச்
சுடர்நகை துலங்கவே! (ஜ)

நீர்வளம் நிலவளம்
நிகரிலாக் கலைவளம்
ஊர்வளம் உயிர்வளம்
உயர்வளங்கள் ஓங்கியே! (ஜ)

தீத்தணல் பறந்திடும்
தியாகவேள்விக் தூண்டமே.
சாத்விக பலத்தினுற்
சகத்தை ஆளும் கண்டமே! (ஜ)

காசினியிற் புண்ணியங்கள்
கைதவிக்கும் கோயிலே.
ஆசியாவின் ஜோதியே—சுத்
தானந்தானு பூதியே—ஓம்
அமரசக்தி நிலயமே! (ஜ)

ஜயஹிந்த்!

சுத்தானந்த பாரதி



6. குலம் எது, நலம் எது?

புனா நகரில் நதிக்கரையிலே ஹைகோர்ட்டு நீதிபதி மகாதேவ கோவிந்த ரானடே நீண்டதூரம் உலாவிவருவது வழக்கம். அப்போது அந்தவழியாக விறகுக்காரிகள் பெருஞ்சுமைகளுடன் சந்தைக்குப் போவார்கள். சிலசமயங்களில் அவர்கள் விறகுச் சுமைகளைக் கீழே இறக்கிவைத்துக் களைப்பாறுவதுண்டு. களைப்பாறியபின் அந்த மூட்டுச் சுமைகளை மறுபடியும் தலைமேல் தூக்கிவைத்துக் கொள்வது எளிதான காரியமன்று. நீதிபதி பலசாலியாக இருந்ததுடன் ஆடம்பர அதிகார உடை இல்லாமலும் வேலையாள் பின்தொடராமலும் உலாவிவந்ததால், விறகுக்காரிகள் இவரை நோக்கி, 'இந்தச் சுமையைத் தூக்கிவைத்துவிடப்பா தலைமேலே' என்று சொல்வார்களாம். இவரும் அப்படியே தவறாது செய்துவந்தாராம்.

பாரதியும் கம்பரும்

ஏழைகளுக்கு உதவுவது நீதி என்பதைச் சிறந்த கல்விமானும் உயர்ந்த மதியாளரும் அன்புச் செல்வருமான நீதிபதி ரானடே நன்குணர்ந்திருந்தார். நம் தேசிய கவி பாரதியார்,

நீதி, உயர்ந்த மதி, கல்வி,—அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்

என்று பாடியிருக்கிறாரே பாப்பாப்பாட்டிலே, அந்த மேலோரில் ஒருவரல்லவா மகாதேவ கோவிந்த ரானடே என்ற மகாராஷ்டிர பிராம்மணகுல திலகம்!

பாரதியார் குலம்குறித்துக்கொண்ட கொள்கை இவரது அரசியல்-கொள்கைபோல் மகாராஷ்டிரக்கொள்கையா? தமிழகத்துப் பெரியோர் கொள்கைதான். இன்றைய இளங்கொள்கையா? பழம்பெருமக்களின் பண்பட்ட கொள்கை. ராமனிடம் நீதி நிறையக் கண்ட பரசுராமன், 'நீதியாய்! நீயே வேதியன்' என்று கூறியதாகக் கம்பர் கூறியுள்ளாரல்லவா? 'அரசர் உருக்கொண்டமைந்த வேதியன்' என்று கும்பகர்ணனும் போற்றுகிறான் ராமனை! அதே

கும்பகர்ணன் ராமனைச் சரணமாக அடைந்த விபீஷணனை 'நீதியால் வந்ததொரு நெடுந்தரும நெறியல்லால் சாதியால் வந்தசிறு நெறி அறியான்' என்கிறான். அனுமனும் இதே விபீஷணனில்லத்தை,

வந்தனை நீதியும் பிறவும் மாண்பமைந்(து)
அந்தணர் இல்லெனப் போலிந்த தர்மரோ!

[மாண்பமைந்து—மாட்சியுடன் அமைந்து. அரோ—(இங்கு) அதிசயத்தைக் குறிக்கும் அசை.]

என்று அதிசயமாய்க் குறிப்பிடுகிறான். நீதிதர்மமே ஜாதிதர்மத்திற்கும் மேல், நீதியென்றால் ஒருஜாதிக்கு ஒரு நீதியல்ல, என்பது பாரதியாருக்கு மட்டுமல்ல, கம்பர் முதலான பெரியோருக்கெல்லாம் உடன்பாடுதான்.

வர்ண தர்மமா, தாஸ்ய தர்மமா?

இப்பெருங்கொள்கை கம்பரிடமிருந்து பாரதியார் வரை வந்து சேர்ந்ததென்றால், கம்பருக்கு இது ஸ்ரீவைஷ்ணவ ஆழ்வார்—ஆசாரியர்களின் பரம்பரையிலிருந்து விசேஷப்பொலிவுடன் வந்து சேர்ந்ததென்று ஊகிப்பது தவறாகாது. கம்பர் தமது தனிப்பெருங் காவியத்திலே ஜாதிக்குமேல் நீதியையும், ஆசாரத்திற்குமேல் அன்பையும் போற்றுவதற்குக் காரணம், ஆழ்வார்-ஆசாரியர்களைப் பின்பற்றி வர்ணதர்மத்திற்குமேல் தாஸ்யதர்மத்தைப் போற்றியதுதான்.

ஆம்; ஆழ்ந்து நோக்கினால், ஸ்ரீவைஷ்ணவம் ஸாராம்சத்தில் தாழ்ந்து தொண்டாற்றும் தாஸ்ய தர்மம்தான்— பெரியாழ்வார் அருளியவாறு 'பண்டைக்குலம்' தவிர்ந்த தாஸ்யதர்மம். இதே கருத்தைத்தான், 'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற அப்பர் சுவாமியின் மகாவாக்கியமும் சைவத்தின் ஸாரமாக வற்புறுத்துகிறது. பணியிலும், இறைவன் பணியைக் காட்டிலும் அடியார் பணியே மேல் என்பது சைவவைஷ்ணவ சமயங்களின் கருத்து.

கச்சிநம்பியும் ரஷ்யநம்பியும்

திருக்கச்சிநம்பி தாம் உடுத்திருந்த பட்டுக்கரைப் பரிவட்டத்தில் மாசுபடியாது கச்சி வரதருக்குப் பணியாற்றிவந்தார் முதன் முதல். இவர் வைசியப்பெரியார். பார்ப்பனப்பெரியோர்களும் தலை சாய்த்து வணங்கிய பெரியார். இவர் பெரியநம்பிக்கு வண்டியோட்டிப் பணிபுரிந்த காலத்தில் ஒருநாள் வழியிலே பெருமழை பெய்ய அந்த வண்டிக்காரனுடையும் மாசடைந்து சேறுபடிந்ததாயிற்று. இந்த நிலையிலேதான் இவருடைய பணியும் தனிப்பெருஞ் சிறப்புற்றதாம்; இப்பெரியாருக்கும் நற்கதி நிச்சயமாயிற்றாம்.

இதேமாதிரி ஒரு வரலாறு ரஷ்யாவிலும் வழங்கியதுண்டு. ஸோவியத் ரஷ்யாவில் வழங்குகிறதோ என்னவோ, தெரியாது. காஸியன் என்று ஒரு பக்தர், நிக்காலஸ் என்று வேறொரு பக்தர். காஸியன் என்பவரின் விழாநாள் காலுவருஷத்திற்கொருதரம்—அதாவது 'லீப்' வருஷத்தில்— வருகிறது. நிக்காலஸ் என்ற பக்தமணிக்கோ வருஷத்திற்கு நாலுவிழாத்தினங்கள். காரணம் என்ன? ஒரு ரஷ்யக்கதை சொல்லுகிறது: இரண்டு பக்தர்களும் பரமண்டல நாதரிடம்போய் நிற்கிறார்கள். காஸியன் விலட்சண

ராய் மாசுபடாத உடையில் வந்திருக்கிறார். நிக்காலஸ் என்பவரோ சேறுபடிந்த அழுக்குடையில் வந்து நிற்கிறார்.

'என்ன, காஸியன்! நீர் வரும் வழியிலே மண்ணுலகில் கண்டதென்ன' என்று கேட்கிறார் பரமபதநாதர்.

'ஒரு குடியானவன் வண்டியோடு சேற்றில் சிக்கிக்கொண்டான்' என்று பதில் வருகிறது.

'ஏனோ நீர் உதவி செய்யவில்லை?'

'இந்தத் தூயஉடை மாசடையுமே என்றுதான்; அழுக்குடையில் சன்னிதானத்திற்கு வரலாமா?'

பிறகு பரமபதநாதர் அடுத்து நிற்கும் பக்தமணியை நோக்கி, 'ஏன்தானோ, நிக்காலஸ்! இந்த அழுக்குடையில் நம்சன்னிதிக்கு வந்து சேர்ந்தீர்?' என்று வினவுகிறார்.

'அந்தக் குடியானவனையும் வண்டியையும் சேற்றிலிருந்து தூக்கிவிட்டதால் பீதாம்பரத்தில் அழுக்கேறிவிட்டது' என்று பதில் வருகிறது.

பகவான் உடனே "நிக்காலஸ் என்ற ரக்ஷகநம்பியின் விழாவை ரக்ஷயமக்கள் ஒவ்வொரு வருஷத்திலும் நான்குமுறை கொண்டாட வேண்டும்" என்கிறார். காஸியன் என்ற ஆசாரசீலருக்கோ நான்கு வருஷத்திற்கு ஒருமுறை விழாக்கொண்டாடுவதே போதும் என்கிறார். இதுகூட அவசியமில்லையென்று 'பொதுவுடைமைப் பரமபதத்தின் புதுநாதர்' தீர்மானித்திருக்கலாம்: ஆனால், இது வேறு கதை.

நலமே குலம்

ரக்ஷக நம்பியின் கதை புராண ரகத்தைச் சார்ந்ததுதான். திருக்கச்சி நம்பி கதையோ உண்மையான வாழ்க்கைக்கதை. மேலும் பணிசெய்யும் தொண்டக்குலமே தொழுகுலம், ராஜகுலம் என்பதைத்தான் திருக்கச்சிநம்பி வண்டியோட்டிய வைபவம் எவ்வளவு தெளிவாக உபதேசிக்கிறது! நம் சென்னைமாநகரின் பகுதியான பூவிருந்தவல்லி ('பூனமல்லி' என்றும், 'பூந்தமல்லி' என்றும் பரிகசிக்கப்பட்டபோதிலும்) உலகத்திற்கே வழிகாட்டுவதுபோலத் தோன்றுகிறது, 'குலம் எது, நலம் எது!' என்பது குறித்து.

பட்டாடை புழுதிபடியாமல், ஆசாரம் மாசேறாமல், வர்ணம் கறுக்காமல் குலநலம் காப்போர் மேலோர் அல்லர். நீதிதர்மத்தில் நின்று, தாழ்ந்தாருக்கும் தாழ்ந்துநின்று, உடம்பிலும் உடையிலும் மாசேறினாலும் உள்ளம் மாசுறாது கைங்கரியம் புரிவதே நலம்; இந்த நலமுடையோருக்குக் குலம் தருகின்றது இவர்களுடைய கைங்கரிய வைபவம்.

பரமபதத்திலே பொன்னுடை (பீதாம்பரம்) புழுதி படியாது வீற்றிருந்தால் பரம்பொருளுக்கும் நலமில்லையாம். மீன், ஆமை...என்றெல்லாம் பிறந்து ராமனாகவும் கண்ணனாகவும் 'கால் தரை தோய,' ஆடைபுழுதிபட நின்று மக்கட்பணி புரிந்ததுதான், தொண்டர்க்குத் தொண்டனாக நின்றதுதான், பகவானையும் 'யாவர்க்கும் தொழுகுலம்' ஆக்கியிருக்கிறதென்றால், 'தொண்டக்குலமே தொழுகுலம்; தொண்டே பெருநலம்' என்பது மெய்ம்மைப் பெருவார்த்தையன்றோ?

தகுந்த தண்டனை

முன்கூடத்தில் தம்பூராவுடன் உட்கார்ந்து "யாரோ இவர் யாரோ" என்கிற பைரவிராகக் கீர்த்தனையைப் பாடிக்கொண்டிருந்தாள் அஹல்யா. அவள் உள்ளம், உண்மையாகவே மேற்படி க்ருதியின் முதலடிக்கு பதிலைத்தேடிக்கொண்டிருந்தது. "அஹல்யா" என்றழைத்துக்கொண்டே உள்ளே நுழைந்த சந்தானம் சிரித்துக்கொண்டே "அவர் பெயர்தானே? ஜகந்நாதன். அவரும், என்னுடைய ஆபீஸில் வேலை பார்க்கிறார். இப்போது உன் சந்தேகம் தீர்ந்துவிட்டதல்லவா?" என்றான்.

அஹல்யாவின் வதனம் ரோஜா மலரெனச் சிவந்தது. "போ அண்ணா! உன் பரிகாசமும் நீயும்! நான் இனிமே பாடினேன்னு பார்" என்றாள். "சீ அசடே விளையாட்டுக்குச் சொன்னால் என்னமோ ரொம்பத்தமா கோவிச்சுக்கறயே! சரி, அது போறது. ஜகந்நாதன் என்ன சொன்னான்?" என்றான்.

"அவர் "சந்தானம்" என்று கூப்பிட்டுக்கொண்டே ஹாலில் தயங்கி நின்றார்" என்று அவள் மேலே சொல்வதற்குள் சந்தானம் குறுக்கிட்டு "ஹும்! 'அவர்' வந்துநின்றாரா? சரி அந்த 'அவர்' என்ன சொன்னார்?" என்றான் பரிசாகமான குரலில்.

அஹல்யாவுக்கு நிஜமாகவே கோபம் வந்துவிட்டது. தன் தமயனை விழித்துப்பார்த்து, 'அவர்' என்று சொல்லாமல், பின் எப்படி சொல்லச் சொல்கிறாய் அண்ணா?" என்றாள். "சரி போகிறது! மேலே சொல்லேன்" என்றான் சந்தானம் சிரித்துக்கொண்டே. "மேலே என்ன கீழே! நான் போய் "அவர் வீட்டிலில்லை. கடைக்குப்போயிருக்கிறார்" என்று சொன்னேன். அவர் உடனே போய்விட்டார்" என்று கூறிமுடித்தாள்.

"நான்தான் உன் சங்கீதத்தைக் கேட்க அவனை வரச்சொல்லியிருந்தேன். இப்போது அவனை வழியில் பார்த்தேன். நாளை மாலை ஆபீஸ்விட்டதும், நேரே என்னுடன் நம்ம வீட்டிற்கு வருவதாக வாக்களித்திருக்கிறான். நாளைக்கு அவனுக்கும் சேர்த்து டிபன் பண்ணிவிடு" என்று சொல்லிவிட்டு முகங்கழுவ தோட்டத்து பக்கம் சென்றான் சந்தானம். அவன் கூறிய விஷயங்கள் அவள் மனதில் திரும்பத் திரும்பச் சுழன்று திரிந்தன; மறுபடி தமயனின் குரலைக்கேட்டபோதுதான் சுய உணர்வை அடைந்தாள்.

*   *   *   *   *

ஸந்தானத்தின் ஒரே சகோதரிதான் அஹல்யா. தமயன் ஒருவனே ஆதரவு அவளுக்கு இப்பரந்த உலகில். அவன் வேலைக்குப் போனதுமுதல், தன் சம்பளத்தில் பாதியை, தன் சகோதரியின் பொருட்டே சேர்த்துவந்தான். அஹல்யா இண்டர் ஸீனியர் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தாள்.

*   *   *   *   *

மறுநாள் கல்லூரியிலிருந்து சீக்கிரமாகவே திரும்பிய அஹல்யா காப்பி, டிபன் முதலியவை தயார்செய்து வைத்தாள். ஸந்தானம்

தன் நண்பனுடன் வந்து சேர்ந்தான்; ஒருவரை ஒருவருக்கு அறிமுகப்படுத்திவைத்தான்.

ஜகந்நாதனின் முகம் ஜிவ்வென்று சிவந்தது. அஹல்யா உள்ளே சென்றபின் "நேற்று நான் இங்கே வந்திருந்தபோது, இவள் உன் மனைவியென்று நினைத்தேன்" என்று கூறினான் அவன். இடிஇடி என்று சிரித்த சந்தானம், "நானும் உன்னைப்போல் பிரம்மசாரி கட்டைதாண்டா" என்று கூறவும் இருவருமாகச் சிரித்தனர்.

"அஹல்யா! ஒரு பாட்டுபாடு" என்று உத்திரவிட்டவன், குறும்பாக சிரித்தவண்ணம் "இன்றுதான் ஆசாமி யார்! என்ன பெயர்!" என்கிற புதிர் புரிந்துவிட்டதல்லவா? அதனால் 'பாரோ இவர் யாரோ!' பாடவேண்டாம். வேறு ஏதாவது பாடு" என்றான்.

கண்களாலேயே தமயனைக் கண்டிக்க எண்ணி தலையை நிமிர்த்திய அஹல்யா ஜகந்நாதனின் விழிகளைத்தான் சந்திக்க நேரிட்டது. எத்தகைய தோல்வி அவளுக்கு! பேசாமல் தலை குனிந்தபடியே ஏதோ ஒரு கிருதியைப் பாடிவிட்டு உள்ளே சென்றுவிட்டாள்.

ஜகந்நாதன் அவர்களிருவரிடமும் விடைபெற்றுச்சென்றபின், "அஹல்யா! ஏன் ஒருவாறாக இருக்கிறாய்?" என்று கேட்டான் தமயன். "ஒன்றுமில்லையே" என்று பதிலளித்தாள் தங்கை. "ஒரு வேளை, ஜகந்நாதனைக் கண்டதும்...என்று பரிகாசம் நிறைந்த குரலில் ஆரம்பிக்க, அஹல்யா களுக்கென்று சிரித்துவிட்டாள்.

* * * * *

அதன்பிறகு பலமுறைகள் அவர்கள் இல்லத்திற்கு வந்து சென்றான் ஜகன். மாதங்கள் உருண்டோடின......அஹல்யா, இண்டர்மீடியட் பரீக்ஷையில், முதல்வகுப்பில் தேறியிருந்த சந்தோஷச் செய்தியை, ஆபீஸில், ஜகந்நாதனிடம் தெரிவித்தான் சந்தானம். அன்றுமாலை, அவர்கள் வீட்டிற்கு வந்த ஜகந்நாதன், அஹல்யாவினிடம் ஒரு புஷ்பப்பொட்டலத்தைக் கொடுத்து, அவள் முதல் வகுப்பில் தேறியதைக் குறித்து தன் மனமார்ந்த சந்தோஷத்தை தெரிவித்தான்.

"ஜகன்! நீ பெரியதொரு தப்பு செய்திருக்கிறாய். குற்றம் செய்தவர்கள் தண்டனை பெறுவது அத்யாவசியமானது. அதனால், நீ செய்த குற்றத்திற்குத் தகுந்த தண்டனையை நான் உனக்குக் கொடுக்கப்போகிறேன்" என்று ஸந்தானம் கூறியதைக் கேட்ட அஹல்யா வியப்போடு அவனைப் பார்த்தாள்.

ஜகந்நாதன் "சந்தானம். நான் ஏதேனும் தப்பு செய்திருந்தால் அதற்கேற்ற தண்டனையை அனுபவிக்கத் தயார்" என்றான்.

ஸந்தானம் "இதோ பார் ஜகந்நாதா! நீ என் அருமை சகோதரியின் உள்ளத்தைத் திருடிக்கொண்ட கள்ளன். பலே பக்காத்திருடனப்பா நீ! அதற்கு தண்டனையாக, நீ இந்த விஷமக்காரியை மணந்து அவளிடம் அகப்பட்டுக்கொண்டு தவிககவேண்டும் என்பதே என் தீர்ப்பு" என்று கூறிக் கலகலவென்று நகைத்தான்.

இருவரும் வெட்கித் தலைகுனிந்தனர். இருவருடைய உள்ளங்களும் ஒன்றுபட்டு இன்ப வாரிதியில் ஆழ்ந்தன.

என் சுய சரிதை

சகோதரி R. S. சுபலக்ஷ்மி அம்மாள்

(சென்ற இதழ் தொடர்ச்சி.)

1914-ஆம் வருஷ சம்பவங்கள்.

பிப்ரவரி மாதத்தில் சென்னை கவர்னர் தம்பதிகள் லார்ட் பெண்ட்லேண்டும் லேடி பெண்ட் லேண்டும் பாடசாலையையும் ஆச்ரமத்தையும் வந்து பார்த்தார்கள். அதே மாதம் அன்னை பெஸண்ட் அம்மையாரும் வந்து ஆச்ரமத்தைப் பார்த்து சந்தோஷித்தார்கள். அன்றைய தினமே ஸ்ரீ சாரதா ஐக்கிய சங்கத்தில் பெண்களது முன்னேற்றத்தைப்பற்றி ஒரு சொற்பொழிவு ஆற்றினார்கள். மார்ச்சு மாதத்திலிருந்து 6 மாதம் லீவு எடுத்துக்கொண்டு மிஸ் லிஞ்ச் அவர்கள் சீமைக்குப் போய்வந்தார்கள். அந்த வருஷக் கோடை விடுமுறையில் முதல் 20 நாள் சித்தியவர்கள் அம்முக்குட்டியையும் அகிலாவையும் அழைத்துக்கொண்டு குன்னூரிலிருந்த அகிலாவின் தந்தை ஸ்ரீமான் சுந்தர்ராவ் வீட்டுக்குப் போய் உதகமண்டலம், கோவை முதலான இடங்களைப் பார்த்துவிட்டு வந்தார்.

மைசூர் பிரயாணம்

அதன்பிறகு நான் என் பெற்றோர்கள் சகோதரிகளுடன் பெங்களூரில் என் சிறிய தகப்பனார் வீட்டுக்கருகில் ஒரு வீடு வாடகைக்கு எடுத்துக்கொண்டு 1 மாதம் தங்கினோம். அந்த வருஷம் மார்ச் மாதத்தில் என் சகோதரி சாவித்திரியின் கணவர் சீமையில் I. M. S. பரிக்ஷையில் தேர்ச்சிபெற்று பெங்களூரில் ஒரு ஆஸ்பத்திரில் வேலையாக வந்தார். "லோஸாலே" என்னும் பங்களாவில் முதன்முதல் சாவித்திரி, அவள் கணவர் குழந்தைகளுடன் குடித்தனம் செய்ய ஆரம்பித்தாள். நாங்கள் பங்களூரில்இருந்து கொண்டு அங்கிருந்தே பல இடங்கள் போய்ப் பார்த்துவந்தோம். மைசூருக்குப் போய் நாலுநாள் தங்கி சாமுண்டேச்வரிமலை, மிருகக் காட்சிஇடம் அரண்மனை யெல்லாம் பார்த்தோம்.

அந்தக்காலத்தில் மைசூரில் பரோபகாரியான ஸ்ரீமான் நரஸிம்மய்யங்கார் என்னும் பெரியார் ஒருவர், பாலிய விதவைகளின் பரிதாபத்தைப்பார்த்து இரக்கப்பட்டு அவர்களுக்கு வித்தையும் கைத்தொழிலும் கற்பிப்பதற்காக ஒரு ஆச்ரமம் ஆரம்பித்து நடத்திக்கொண்டிருந்தார். அதைப் பார்ப்பதற்கு ஒருநாள் போயிருந்தோம். நாங்கள் போனசமயம் இன்னும் சில இளம் கனவான்களும் ஆச்ரமத்தைப் பார்க்க வந்திருந்தார்கள். நாங்கள் எட்டுப்பத்துப்பேர் நாற்காலிகளில் அமர்ந்தோம். எங்கள் எதிரில் ஆச்ரம மாணவிகள் சுமார் 30 பேர் நின்றுகொண்டு பாடினார்கள். தங்களை உற்றுப்பார்த்துக்கொண்டிருக்கும் கனவான்களுக்கெதி

ரில் நின்று பாடுவதற்கு வெட்கப்பட்டுக் கொண்டு மற்றவர்களுக்குப் பின்னல் இடைந்து ஒளிந்துகொள்ளும் சில பெண்களைக் கவனித்தேன். ஆச்ரமத்தைப் பார்க்கவரும் ஒவ்வொருவருக்கும் எதிரில் கூச்சப்படும் இந்தப் பெண்களை நிறுத்திப் பாடச்சொல்வது அவசியமில்லை யென்று நினைத்தேன். இந்தமாதிரி ஆச்ரமத்தைப்பார்க்கவருபவர்கள் உண்மையான அபிமானிகளிலிருந்து வேடிக்கை பார்க்கவரும் விஷமக்காரர்கள் வரைக்கும் பலதிறப்பட்டவர்கள் இருப்பார்கள்.

சென்னையில் ஆச்ரமம் ஆரம்பித்த முதல் சில வருஷங்கள் ஆச்ரமத்தைப்பார்க்கவேண்டும் என்று எழுதிக் கேட்டுக்கொண்டும், எழுதாமலே திடீரென்றும் பலர் வருவார்கள். அவர்களை நான் மாணவிகள் இருக்குமிடங்களுக்கு அழைத்துப் போவதில்லை. விஸிடர்கள் அறையிலேயே அவர்களுடன் பேசி அனுப்பிவிடுவது வழக்கம். பிரெஸிடென்ஸி காலேஜிலிருந்து ஒரு ஞாயிற்றுக்கிழமை பட்டப்பகல் 12 மணி வெயில்வேளையில் ஏழெட்டு மாணவர்கள் வந்து, ஆச்ரமத்தின் அவசியத்தைப்பற்றியும் தங்களுக்கு ஆச்ரம ஸேவையிலுள்ள அபிமானத்தைப் பற்றியும் விவரித்து ஆச்ரமத்தைப்பார்க்கவேண்டுமென்று கேட்டார்கள். வெறும் விஷம எண்ணத்துடன் வந்தவர்கள் என்பதை ஊகித்துக்கொண்டு அன்று விடுமுறைநாளில் சிரமபரிகாரம் செய்துகொண்டு பலவித வேலைகளில் ஈடுபட்டிருக்கும் மாணவிகளுக்கு நடுவில் அவர்களை அழைத்துப்போக முடியாதென்று கண்டிப்பாகக் கூறி அவர்களையனுப்பினேன். என்மீது அவர்களுக்கு மிகுந்த கோபம். நிற்க,

கோலார் தங்கச்சுரங்கம் பார்த்தோம். ஆழ்ந்த சுரங்கங்களிலிருந்து தங்க ரேகைகள் உள்ள கற்களை உடைத்து ஸன்னமான புழுதியாக்கி, தண்ணீருடன் கலந்து பாதரசத்தின் உதவியால் தங்கத்தைப்பிரித்து எடுத்து அதை செங்கற்களைப்போலச் செய்து சீமைக்கு ஏற்றுமதியாகிறது. பிறகு ஸ்ரீரங்கப்பட்டணம் போய் காவிரியாறு இரண்டாகப் பிரிந்து மறுபடி கூடும் "ஈராற்றின் நடுவிலே பள்ளிகொண்டுள்ள ரங்கநாதப் பெருமாளை" தரிசித்தோம். காவிரிஸ்நானம் சுகமாயிருந்தது. ஹைதர் ஆலி, திப்பு ஸுல்தான் காலத்து சரித்திர சம்பந்தமான சில இடங்களை அந்த ஊரில் பார்த்துவிட்டு அங்கிருந்து நஞ்ஜங்கோடு என்னும் இடத்தையும் பார்த்துவிட்டுத் திரும்பினேம். கடைசியாக சிவசமுத்திரம் போனேம்: என் சிறிய தகப்பனருக்கு அங்கு 2 நாள் அவர்வேலை நிமித்தம் (எஞ்ஜினீயர்) போக வேண்டியிருந்தது. அவருடனேயே காரில் என் தகப்பனர் ஸ்வர்ணம் நான் மூவரும் போய்வந்தோம். அங்குள்ள நீர்வீழ்ச்சிகளும் அவற்றின் சக்தியினல் காந்த சக்தியுண்டாக்குவதும் பார்த்தோம். இப்படியாக விடுமுறையை சந்தோஷமாகக் கழித்துவிட்டு ஜூன் பாதிக்குமேல் சென்னைதிரும்பினேம்.

திருவல்லிக்கேணிக்குக் குடியேறியது

என் தகப்பனருக்கு கண்பார்வை சற்று குறைய ஆரம்பித்ததால் அவர் வேலையிலிருந்து விலகிக்கொண்டார். அந்த வருஷம் ஜூலை மாதத்தில் என் தங்கை ஸ்வர்ணம் இண்டர்மீடியட் பரீ

க்ஷையில் திறமையுடன் ராஜதானிக்கலாசாலையில் B. A. வகுப்பில் சேர்ந்தாள். ஆகவே என் பெற்றோர்களுக்கு எழும்பூரில் அலுவல் ஒன்றுமில்லாததால் T. P. கோவில் தெருவிலேயே வாடகைக்கு வீடு எடுத்துக்கொண்டு ஜூன் மாதக்கடைசியிலேயே அங்கு வந்து குடியேறினர்கள்.

முதல் உலக-மகாயுத்தம்

அந்தவருஷம் 1914, ஆகஸ்ட் மாதம், முதல் உலகமகாயுத்தம் ஆரம்பம். என் சகோதரி சாவித்திரியின் கணவரை கல்கத்தாவுக்கு மாற்றினர்கள். ஜூலை கடைசியில் சாவித்திரியும் அவள் கணவரும் பெங்களூரிலிருந்து வந்து பெரியபெண்கள் காந்தாமணியையும் சாந்தத்தையும் என் பெற்றோர்களிடம் விட்டுவிட்டு 3 வயதுக் குழந்தையான லலிதாவுடன் கல்கத்தாவுக்குப் போய் குடித்தனம் ஆரம்பித்து 1 மாதம் ஆவதற்குள், சாவித்திரியின் கணவர் துரைசாமியை ஒரு கூர்க்கா சேனைக்கு யுத்தடாக்டராக உடனேபோய்ச் சேரும்படி ஆர்டர் வந்தது. ஊரில்வந்து எல்லாரையும் பார்ப்பதற்குக்கூட அவகாசமில்லாமல் சாவித்திரியையும் குழந்தையையும் ரயிலேற்றி அனுப்பிவிட்டு அவர் இந்தியாவையே விட்டு ஐரோப்பாவுக்குச் சென்றார். அநேகமாய் வாரம் ஒருமுறை கடிதம் வரும். சில சமயம் யுத்தம் காரணமாய், போக்குவரத்து சாதனக்குறைவினல் கடிதம்வரத்தாமதமாகும். கவலையுடன் கூடிய சாவித்திரிக்கு ஏதேனும் ஏற்பாடு செய்யவேண்டும் என்று எண்ணி, கடைசியில் திருவல்லிக்கேணி கவர்மெண்ட் ஹைஸ்கூலிலேயே இரண்டு வருஷம் ஆறுவது பாரம் வரைக்கும் படித்தாள். "School of Arts"-இலிருந்து ஒரு உபாத்தியாயரிடம் வாரம் 3 முறை சித்திரம் வர்ணச்சித்திரம் இவைகள் கற்றுக்கொண்டு பரீக்ஷைகளுக்குப் போனாள். இப்படியாக பெற்றோர்களுடன் இருந்து குழந்தைகளையும் பார்த்துக்கொண்டு கணவர் வரவை எதிர்பார்த்திருந்தாள்.

ஸெப்டம்பர் 21-ஆந்தேதி ஜர்மன் கப்பல் "எம்டன்" பட்டினத்தை எட்டிப்பார்த்து 2, 3 குண்டுகளை வீசி ஜனங்களுக்கு மிகுந்த கலவரத்தையும் பயத்தையும் உண்டாக்கிவிட்டது. ஹார்பரில் இருந்த 2 எண்ணெய்க்கிணறுகள் பற்றிக்கொண்டு எரிந்ததை மாடியிலிருந்து பார்த்துப் பயந்தோம்.

ஆச்ரம இடம் மாற்றம்

யுத்தவிஷயம் இப்படியிருக்க, எங்கள் ஆச்ரமம் இருந்த வீட்டு சொந்தக்காரர் அந்தவீட்டை வேறு ஒருவருக்கு விற்றுவிட்டார். வீட்டை வாங்கின ஒரு உத்தியோகஸ்தர் தானே அந்தவீட்டில் வந்து இருக்கவேண்டுமென்று சொல்லி எங்களுக்கு 1914-ஆம் வருஷம் ஜூலை மாதத்திலேயே நோடீஸ் கொடுத்துவிட்டார். ஸ்கூல் தலைவியாகிய மிஸ் பிரேஜரும் இன்ஸ்பெக்ட்ரஸ் ஆகிய மிஸ் லிஞ்சும் நானும் திருவல்லிக்கேணியில் ஆச்ரமத்துக்குத் தகுதியான வீட்டுக்காக அலைந்தது கொஞ்சமல்ல. அந்த சமயம் 30 மாணவிகளும் மேன்மேலும் வரப்போகும் மாணவிகளும் வசதியாகத் தங்குவதற்குத் தகுந்த பெரிய இடம் ஒன்றுமே கிடைக்கவில்லை.

சொந்தக்காரர் டிஸம்பர் முதற்தேதிக்கு தனக்கு வீடு வேண்டுமென்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டபடியால், வேறுவழியின்றி ஆச்ரமத்தை எதிரிலுள்ள ஸ்கூலுக்கே மாற்றினோம். காலை 9 மணிக்குள் ஆச்ரம மாணவிகள் எல்லாரும் ஸ்நானம், சாப்பாட்டை முடித்துக்கொண்டு எல்லா இடங்களையும் ஸ்கூல் நடப்பதற்கு ஒழித்துவிட்டுவிடவேண்டும். இப்படியாக மிகுந்த சிரமத்துடன் கிறிஸ்துமஸ் லீவுக்காக பாடசாலை மூடுகிறவரைக்கும் இருந்தோம்.

ஆச்ரமத்துக்கு ஐஸ்ஹவுஸ் கிடைத்த விதம்

ஆச்ரமத்துக்காக நாங்கள் வீடுபார்த்துக்கொண்டிருப்பது திருவல்லிக்கேணியில் அநேகருக்குத் தெரிந்து அவர்களும் முயற்சி செய்துகொண்டிருந்தார்கள். ஆச்ரம மாணவிகளை அழைத்துக்கொண்டு ஐஸ்ஹவுஸ் தெருவழியாக நான் அடிக்கடி மாலைவேளையில் கடற்கரைக்குப் போவதுண்டு. அப்பொழுது மாணவிகள் ஐஸ்ஹவுஸைப் பார்த்துவிட்டு "அக்கா! நமக்கு இந்த இடம் கிடைத்துவிட்டால் எத்தனை சந்தோஷமாயிருக்கும். இந்தப் பெரிய அரண்மனையில் 100 பேருக்குமேல்கூட சௌகரியமாயிருக்கலாமே" என்று அடிக்கடி சொல்வார்கள். நான் அவர்களது பேராசையைப்பற்றி அவர்களைப் பரிகசிப்பது வழக்கம். ஆகவே, கிறிஸ்துமஸ் லீவு விட்ட மறுதினமே "கெர்ணன் அரண்மனை" (Kernan Castle) என்னும் ஐஸ்ஹவுஸின் சொந்தக்கார ஜமீன்தாரின் காரியதரிசி ஒருவர் என்னிடம் வந்து "நீங்கள் ஆச்ரமத்துக்காக இடம் தேடி அலைகின்றீர்களாமே; ஐஸ்ஹவுஸ் காலியாகத்தானிருக்கிறது. நான் ஜமீன்தாருக்கு எழுதி உங்களுக்கு அந்த இடத்தை ஆச்ரமத்துக்குக் கொடுக்கும்படி சிபார்சுசெய்கிறேன்" என்று சொன்னதும் எனக்குண்டான ஆச்சரியமும் ஆனந்தமும் எத்தனையிருக்குமென்பதை அளவிடவே முடியாது. உடனே வண்டிவைத்துக்கொண்டு மிஸ் லிஞ்சிடம் சென்று இது விஷயம் சொன்னேன். எனக்குமேல் அவளுக்கு எல்லையில்லாத சந்தோஷம். உடனே ஜமீந்தாரின் ஏஜெண்டை வருவித்து ஜமீன்தாருக்கு எழுதி ஒரு வாரத்துக்குள் கவர்மெண்டாரின் உத்தரவையும் பெற்று மாதம் ரூ. 150 வாடகைக்கு ஐஸ்ஹவுஸை ஆச்ரமத்துக்கு எடுத்துக்கொண்டோம். ஆச்ரமப் பெண்களுக்கு பெரிய அரண்மனையில் போயிருக்கப்போகிறோம் என்பதில் வரம்பில்லாத குதூகலமும் பரவசமும். எந்த சுகத்திலும் கஷ்டமும் கலந்துதானிருக்கும் அல்லவா? ஆக ஐஸ்ஹவுஸுக்குப்போய்விட்டால் அங்கிருந்து கிட்டத்தட்ட $\frac{3}{4}$ மைல் நடந்து, வெயிலிலும் மழையிலும் ஸ்கூலுக்கு நடந்துபோய் வரவேண்டுமே என்னும் விசாரம் ஏற்பட்டது.

1915-ஆம் வருஷத்தில் ஐஸ்ஹவுஸ் பக்கத்தில் வேறு பெரிய இடங்கள் கிடையாது. குவீன் மேரி காலேஜ் அப்போது இல்லை. ஐஸ்ஹவுஸுக்கு அருகில் அநேகம் பரதவர்களின் குடிசைகள். ஐஸ்ஹவுஸ் ரோடில் அந்தக்காலத்தில் வீடுகள் கிடையாது. பாலத்தின் மேற்கில் பம்பிங்ஸ்டேஷன் உண்டு. வலையர்கள் குடிசைகள் தாண்டி பக்கிங்ஹாம் கால்வாயின் இருபுறத்திலும் சுடுகாடு. ஐஸ்ஹவுஸ்மாடியிலிருந்து பிணங்களை எரிக்கும் நெருப்பு தெரியும்.

அந்த நாற்றமும் வரும். எட்வர்ட் எலியட் ரோட்டிலிருந்து கடலுக்குவரும் மூலையில் ஸர். சுப்ரமணி அய்யர் அவர்களது பங்களா. அதுதான் கண்ணுக்கெட்டின தூரத்தில் குடியிருப்பிடம்.

ஐஸ்ஹவுஸ் ஒருகாலத்தில் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு சொந்தமாயிருந்திருக்கலாம். சிப்பாய்களுக்கு உபயோகப்பட்டிருக்கலாம். பிறகு ஒரு கம்பெனியார் வசத்துக்கு வந்து அந்தக்கட்டிடத்தில் சமுத்திர மட்டத்துக்குக் கீழேயிருக்க ஒரு பெரிய நிலவறையில் வெளிதேசங்களிலிருந்து ஸ்டீமர்களில் கொண்டுவரும் ஐஸைக்கொண்டுவந்து வைத்து பட்டினத்தில் பல இடங்களுக்கும் அனுப்புவார்களாம். அக்காலத்தில் கடல், ஐஸ்ஹவுஸுக்குச் சமீபத்திலும் வடக்கே ராயபுரம் முதலான இடங்களில் அதிகதூரம் தள்ளியுமிருக்குமாம். கடல்—வாட்டம் காலத்துக்குக்காலம் மாறிக்கொண்டேவரும். சில இடங்களில் கடல் உள்ளே புகுந்து இடங்களை ஆக்ரமித்துக்கொள்ளும்-(முதல் இடைச்சங்க இடங்கள், காவிரிப்பூம்பட்டினம், மகாபலிபுரம் போல). சில இடங்களில் கடல் பின்னடைந்து புதிய இடங்கள் தோன்றும். ஆக, சென்ற 100வருடங்களுக்குள்ளேயே சென்னைக்கடற்கரையின் வாட்டமும் மாறிக்கொண்டு வருகிறது. ராயபுரத்தில் கடல் அதிக சமீபத்தில் வந்துகொண்டிருக்கிறது. நான் ஐந்தாறுவயதுக் குழந்தையாய் சைதாப்பேட்டையிலிருந்தபோது ஒரு நாள் என் தகப்பனாரும் இன்னும் சிலரும் இதைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். ராயபுரத்துக்குச்சமீபமாக கரையை நோக்கி கடல் உட்புகுந்துகொண்டு வருகிறது. ராயபுரத்தையே முழுக்கிவிடுமோ என்னவோ என்று பேசினார்கள். பயந்த, இளகின என் மனதில் இது அன்றிரவு தூக்கமில்லாமல் செய்துவிட்டது. ராயபுரம் முழுகிவிட்டால் பிறகு பட்டினமே முழுகிவிடுமோ! அதற்கப்புறம் நமது சைதாப்பேட்டையும் முழுகிவிடுமோ என்றெல்லாம் யோசனை.

அந்தக்காலத்தில் சென்னையில் ஐஸ் செய்வது கிடையாது. வெளிதேசங்களிலிருந்துதான் வரவேண்டும். அதை நிரப்பிவைத்திருந்த இடத்தை ஐஸ்ஹவுஸ் என்றும், அது இருந்த தெருவையே ஐஸ்ஹவுஸ் ரோடு என்றும் பெயரிட்டிருந்தனர்.

பிறகு கம்பெனியாரிடமிருந்து ஒன்றிரண்டு கைகள் மாறி மைசூர்வாசியான ஸ்ரீமான் பிலகிரி அய்யங்காருக்குச் சொந்தமாயிற்று. அவர் காலத்தில் யாரோ ஒருவர் அந்த இடத்தில் தற்கொலை செய்துகொண்டாராம். பிறகு அவருக்கேற்பட்ட ஏதோ சிரமத்தினால் ஸ்ரீ பிலகிரி அய்யங்காரிடமிருந்து ஒரு ஆந்திர தேசத்து ஜமீன்தார் அந்தக்கட்டிடத்தை ஏலத்தில் ரூ. 19,000 க்கு வாங்கி தன் இளம் மனைவியுடன் அங்கு குடிபுகுந்து அவள் கோஷாவானதால் கடல்கரைக்கு வருபவர்கள் கண்ணில் படக்கூடாது என்பதற்காக உயர்ந்த மதிற்சுவர்களும், கட்டிடத்தைச் சுற்றி அழகிய வாரந்தாக்களும் கட்டினாராம். ஆனால், அவர் அதிக நாள் அங்கிருந்து அனுபவிக்கவில்லை. அவருக்கும் அவர்மனைவிக்கும் ஏற்பட்ட ஏதோ மனஸ்தாபத்தினால் அந்த இடத்தைப் பூட்டி ஒரு ஏஜெண்டை காவல் வைத்துவிட்டு தன் ஜமீனுக்கே திரும்பினார்.

அடுத்த இதழில்:—ஐஸ்ஹவுஸைப்பற்றிய அதிசயவிவரங்கள்.

பெண் இனத்திற்கொரு பெருமை — ஸ்ரீமதி ரங்கப்ரியை

"திருக்கோளூர்ப் பெண்பிள்ளை"

(சென்ற இதழ் தொடர்ச்சி)

4. "தசமுகனைச் செற்றேனோ பிராட்டியைப்போலே"—

மக்கள் படும் துயரத்தைக்கண்டு பிராட்டிமனம் வெதும்பி பரந்தாமனையணுகி "சுவாமி! அடியாள் சொல்லை சற்று செவிசாய்த்துக் கேட்கவேணுமாய்க்கோருகிறேன். நம்குழந்தைகள் ஜெயவிஜயாள் சாபமுற்றது தேவரீரறிந்ததே. அவர்கள் எத்தனைகாலம் நம்மை விட்டுப்பிரிந்திருப்பார்கள். எத்தகைய பாபத்திற்கும் விமோசனமில்லையா? அவர்கள் ராவணகும்பகர்ணனாய்ப்பிறந்து எண்ணிலடங்காத துஷ்கிருத்தியங்கள் புரிகிறார்கள். தேவயக்ஷ கின்னர கந்தர்வஸ்திரீகளை சிறைப்படுத்தியுள்ளனர். அவர்களின் கூக்குரல் அடியாள் செவியைத் துளைக்கின்றது. மனம்தாங்கவில்லை. தேவமாதரைச் சிறைமீட்பதற்காக அடியாள்சிறைபுகப்போகிறேன். அப்போதுதான் காரியம் ஈடேறும்; ராவணன் ஒழிவான்; ஸாதுக்கள் சுகமுறுவர். கர்மயோகியாகிய ஜனகரின்குலம் செழிக்க நான் அவர் புதல்வியாக அவதரிக்கிறேன். தசரதசக்ரவர்த்தி தவமான தவம் கிடந்து வருந்துகிறாரே, அவருக்கு புத்திரராய் தேவரீர் அவதரித்து தர்மஸ்தாபனஞ்செய்து ஸதாசாரமார்க்கமாகிய சரணாகத ரக்ஷகத்தை நாடறியச்செய்து மனமகிழ்ச்சியுறுமாறு அடியாள் வேண்டுகிறேன்" என்றாள். பரந்தாமனும் "தேவிவாக்குக்கு எதிர்வாக்கு உண்டோ?" என்றார். இராவண சம்ஹாரத்துக்கு இவ்வாறு பிராட்டியே காரணபூதையாகியதால் "தசமுகனைச் செற்றேனோ பிராட்டியைப்போலே" என்றாள் திருக்கோளூர்ப்பெண்மணி.

5.—"பிணமெழுப்பிவிட்டேனோ தொண்டமானைப்போலே"—

தொண்டைமண்டலத்துக்கதிபதியாகிய தொண்டைமான் சக்கரவர்த்தி நீதிதவறாமல் ராஜ்யபாரம் செலுத்திவந்தகாலம், ஓர் உன்னத குடும்பத்தவர்கள் சுவாமிதரிசனம் செய்யச் சென்றவிடத்தில் திடீரென அவர்களுள் ஒருவர் மரணமடைய, துக்கசாகரத்தில் மூழ்கி, தட்டுக்தடுமாறித் தவித்துக்கதறிவிட்டார்கள். செய்வது யாதெனத்தெரியாமல் அவ்விடத்திய அரசனாகிய தொண்டமான் சக்கரவர்த்தியிடம் தெரிவித்தார்கள். மகாதார்மிகனும் பரமதயாளுவாயுமுள்ள அத்தொண்டமான் சக்கரவர்த்தி தன்னுயிர்போல் மன்னுயிரையும் பார்ப்பவனாகையால் பகவானாகிய ஸ்ரீனிவாசப்பெருமாளைப்பிரார்த்தித்து அவருடைய கிருபையால் அந்தப் பிணத்தை உயிர்பெறச்செய்து அக்குடும்பத்தை துக்கசாகரத்திலிருந்து கரையேற்றினரென பெரியோர் சொல்லக்கேட்டது. இது எந்த புராணத்திலிருக்கிறதோ தெரியாது. வல்லார்வாய் கேட்டுணர்க. தொண்டமான் சக்கரவர்த்திக்கு பகவான் ஸ்ரீநிவாஸன் ஒருசமயம் தனது சங்கசக்ரங்களையே ஆயுதங்களாகத் தந்துதவியதாகச் சரித்திரமுள்ளதால், ஷடி ஸம்பவமும் நம்பத்தகுந்ததேயாகும்.

6. "பிணவிருந்திட்டேனே கண்டாகர்ணனைப்போலே"

காதில் மணிகட்டியதனாலே கண்டாகர்ணன் எனப்பெயர் பெற்றான். இவன் சிவபிரானின் பூதகணங்களிலொருவன். விஷ்ணு த்வேஷமுள்ளவன். 'ஐயோ! நாராயணநாமம் காதில் கேட்டுவிடப் போகிறதே!' என்றே இத்தகைய மணியைக் கட்டிக்கொண்டவன். ஆனால் இவன்நாராயணநாமம் தன்செவியில் படக்கூடாதென்றிருந்தானேதவிர இவனுள்ளம்—நாராயணநாமத்தைக் கூறக்கூடாது, கூடாது, என்ற முறையிலேயே—சதாசர்வகாலமும் நாராயணனை நினைத்திருந்தது. அதனாலே இவன் செய்த மகத்தான பாபத்திற்குப் பரிகாரம் ஏற்பட்டது.

இவன் அர்த்தநாரீச்வரரை அனுவர்த்தித்து அநேகவரங்களைப் பெற்று, அனுபவித்து, இறுதியில் பிறபிறவியில்லாத மோட்சசாம்ராஜ்யத்தை இச்சித்து சிவபெருமானை ஒருதினம் பிரார்த்தித்தபோது "அதற்கு நான் எஜமானனில்லை. நாராயணன்தான் எஜமானன்; அழியாப் பதத்தை அருளுபவன் ஹரியே" என்றார்.

உடனே அவனது உள்ளம் ஸ்ரீமந்நாராயணனை நாடியது. அவனது உயிர்நேசனான குபேரனும் "நித்தியானந்தயாகிய மோட்சத்தை ஹரியே அருளுபவன். அத்தகைய ஹரி இப்போது பிருந்தாவனம், கோகுலம் முதலிய இடங்களில் ஸ்ரீ கிருஷ்ணனாய் வந்து அவதரித்துள்ளான். அவரிடம் சென்று பிரார்த்தித்துக்கேட்டால் மோட்ச மருளுவான். ஸ்ரீமந்நாராயணன் மகாதயாளு; கருணாகரன்; தன்னடியார்மேல் எப்போதும் கண்ணும் கருத்துமாயிருப்பவன்" என்று உபதேசித்து அனுப்பினான்.

உடனே தன்தோழர்களான பூதகணங்களை அழைத்துக்கொண்டு பகவந்நாமாவை பஜித்துக்கொண்டேவரும்வழியில், அகப்பட்ட மனிதரைக் கொலைசெய்து, அங்கு எதிர்ப்பட்ட ஸ்ரீகிருஷ்ண சுவாமிக்கு நிவேதித்துத் துதித்தான். அதற்கு மெச்சின பகவான், அவனுக்கும், அவன் பிரார்த்தனைப்படி அவனது தம்பிக்கும் முக்தி தந்தார்.

7.— "தாய்க்கோலஞ் செய்தேனே அனசூயையைப்போலே"

"வைதேகி! "கற்புடைய மங்கையருக்குக் கணவனே தெய்வம்". அதை நீ வெகு நன்றாய் அனுஷ்டித்தாய். உன்னைக்கண்டதும் என்மகளென்றே பாவித்துக்கூறுகின்றேன்: என்றும் பர்த்தாவை தெய்வமென நினைத்துக்கொள்ளம்மா! இந்தவாடாத, மணம் குறையாத மாலைபுஷ்பங்களையும், பட்டாடைகளையும், திவ்யாபரணங்களையும் பெற்றுக்கொண்டு அணிந்துகொள், தாயே!" என்றாள் அனசூயா, அத்திரிமகாரிஷியின் பத்தினி. அழகிய மைதிலிக்கு தாய்போல் கோலஞ்செய்து அகமகிழ்ந்தாள் அனசூயை.

8:—"தந்தையெங்கே யென்றேனே த்ருவனைப்போலே":—

பாலனான த்ருவனது உள்ளம் தன்தந்தையைத் தேடியது. அவனுடன் இருந்த பாலர்கள் தத்தம் தந்தையைவிட்டுப் பிரியாததைப் பார்க்க அவன் மனம் தன்தந்தையை நினைத்து ஏங்கியது. அன்னை

மிடம் ஓடினன். "அம்மா! என்தந்தை எங்கே?" என்றான். பார்த்தாள் துருவனின் தாய். "அப்பா குழந்தாய்! உன்தந்தை உன் சிற்றன்னையின் மோகத்திலீடுபட்டுள்ளார். அவர் உன்னைக் கண்ணெடுத்தும் பாரார்" என்றாள். அவ்வார்த்தையைக் கேளாமல் துருவன் தன் தந்தையிடம் சென்றான். ஆனால், ஆங்கு சிற்றன்னையின் சீற்றத்துக்காளாகி, கடுங்கானகம் சென்று தவமியற்றி, புருஷோத்தமனாகிய பகவான் ஸ்ரீமந்நாராயணனை தன் உண்மைத் தந்தையெனக் கண்டுகளித்து இஷ்டசித்திபெற்றான். தன் ஊனத் தந்தையை எங்கே என்று தேடி உலகத்தந்தையைக் கண்டான்.

9:—"மூன்றெழுத்துச் சொன்னேனோ க்ஷத்ரபந்துவைப்போலே"—

மித்திரபந்து என்பதில்லாமல் க்ஷத்ரபந்துவானுனெருவன். "குழந்தையைக்கொன்றான்." "மனைவியை இம்சித்தான்" "பிதாவை வதைத்தான்" "தாயை அழித்தான்" "குடியைக்கெடுத்தான்;" என்று ஒவ்வொருவரும் அரசனிடம் முறையிட்டனர். அரசன் ஓர்பெரிய வனப்ரதேசத்தில் கொண்டுவிடுமாறு கட்டளையிட்டான். காட்டில் விடப்பட்ட க்ஷத்திரபந்து தன்கையில் அகப்பட்டவர்களை தலைவேறு உடல்வேறாக வெட்டிப் போட்டுவந்தான். இவன் மகாபாபியாயிருந்தும் காட்டில் உலாவி வருகையில் ஓர்நாள் ஒருமுனிவரை தடாகத்திற்கு அழைத்துச்சென்று தாகசாந்தி செய்வித்து அவர் படுத்துறங்க இடம் காட்டினன். முனிவரும் சிரமந்தீரப் படுத்துறங்கியபின் எழுந்திருந்து, பந்துவைப்பார்த்து, "அப்பா! குழந்தாய்! நீ மகாதயாளு! சிறந்த உபகாரி. நீயேன் இவ்வனத்தில் தன்னந் தனிமையாயிருக்கின்றாய்? உன் விருத்தாந்தத்தைச் சற்றுக் கூறுவாய்" எனக்கனிவுடன் வினவினர். அவனும் சொன்னான்.

முனிவர், "அப்பா! நீ புரிவது கொலைத்தொழில் என்பதைக் கேட்க மிகவும் வருத்தமாயிருக்கிறது. அத்தொழிலை விட்டு ஒழித்து பிறஉயிரையும் உன்னுயிர்போல் கருதுவதுதான் தர்மம். பிரும்மஹத்யாதிதோஷம் உன்னையண்டிப்பிடித்து வாட்டுகின்றது. நீ வீணில் கெட்டுப்போவதைக் காண என்மனம் சகிக்கவில்லை. ஆகையால் உனக்கு ஓர் உத்தமமான ரகசிய மந்த்ரம் உபதேசிக்கின்றேன். நீ எந்தக் காரியம் செய்யும்போதும் அதை இடைவிடாமல் ஜபித்துக்கொண்டே செய்" என்றார்.

சுவாமீ! அப்படியே செய்கிறேனென பந்துவும் சொன்ன உடனே, அந்த யோகீச்வரர் பந்துவை அருகிலழைத்து— "கோவிந்தா" என்கிற மூன்றெழுத்தை (ஸம்ஸ்க்ருதத்தில் மூன்றெழுத்துதான்) உபதேசித்தார். அதைஅவனும் இடைவிடாமல் ஜபித்து வரலாயினன். நாளடைவில் இத் திருநாமத்தின் ஸங்கீர்த்தனத்தின் பயனாக பஞ்சுப்பொதியில் நெருப்புப்பொறிபட்டது போல் அவனது பாபமெல்லாம் பறந்துபோக, பகவத்கைங்கரியத்திற்குப்பாத்திரமானன்.



ஆத்ம சோதனை

★

கவியோகி
ஸ்ரீ சுத்தானந்த பாரதி

★

● சுயசரிதை ●

14. அந்தத் தாலாட்டு

எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிருக் கவ்வுயிராய்
அங்கங் கிருப்பது நீ அன்றே பராபரமே.

நீயின்றி நானார்? நினைவார்? என் நெஞ்சகமார்?
தாயின்றிச் சூலும்உண்டோ சாற்றாய் பராபரமே.

அல்லும் பகலும் அறிவாகி நிற்பவர்க்கே
சொல்லும் பொருளும் சுமைகாண் பராபரமே

எந்தெந்த நாளும் எனைப்பிரியா தென்னுயிராய்ச்
சிந்தைகுடி கொண்டஅருள் தேவே பராபரமே.

ஆடுவதும் பாடுவதும் ஆனந்த மாகநின்னைத்
தேடுவதும் நின்னடியார் செய்கை பராபரமே.

நெஞ்சமே கோயில்; நினைவே சுகந்தம்; அன்பே
மஞ்சனநீர்; பூசைகொள்ள வாராய் பராபரமே.

ஆனந்த மானநின்னை அன்றியொன்றை யுன்னாத
மோனந் தமியேற்கு முத்தி பராபரமே.

எங்கணு நீ என்றால், இருந்தபடி யெய்தாமல்
அங்குமிங்கு மென்றலைய லாமோ பராபரமே.

எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.

தன்னை யறிந்தால் தலைவன்மேற் பற்றலது
பின்னையொரு பற்றுமுண்டோ பேசாய் பராபரமே.

பராபரக்கண்ணி... அற்புதமான தமிழ் உபநிஷத்து... இதைப்பாடி அம்மா தாலாட்டுகிறாள்.... குழந்தை அந்தத் தாலாட்டிலே சொக்கிப்போகிறது. குழந்தை உறங்குகிறதென்று தாயார் தொட்டிலை விட்டு அப்புறம் செல்லுகிறாள். குழந்தை "பலா பலமே! பலா பலமே! உம் உம்" என்று கத்திக்கொண்டு கீழே இறங்கி அம்மாளிடம் ஓடுகிறது. தாயார் அதன் குறிப்பறிந்து, தகப்பனாரிடம்

கொஞ்சம் தூளியை ஆட்டச்சொல்லி, வீட்டுவேலைகளைக்கவனிக்கிருள். தகப்பனுர் பாடுகிருர்.

ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டெரித்துத்
தூங்காமல் தூங்கிச் சுகம்பெறுவ தெக்காலம்

உள்ளம் அறியா தொளிந்திருந்த நாயகனைக்
கள்ளமனம் தெளிந்து காண்பதினி எக்காலம்

எங்கும் பரவடிவாய் என்வடிவே நின்வடிவாம்
கங்குல்பகல் இன்றியுனைக் கண்டிருப்ப தெக்காலம்

குழந்தை தாலாட்டில் சொக்கி அயரும்...'சரி தூங்குகிறது' என்று தந்தை செல்வார். ஐந்துநிமிஷம் நிம்மதி ; பிறகு...உம் உம் என்று கீழே குதித்து "பலாபலமே பாடு" என்று அம்மாளிடம் சப்பாணிகொட்டிச் செல்லும் "குழந்தை...அப்பா அம்மா தூங்க வேண்டாமா...நான் பார்த்துக்கொள்ளுகிறேன் வாடாசெல்லம்" என்று பாட்டி எடுத்துக்கொள்வாள். பாட்டி வந்தால் தொட்டில் தூளி எல்லாம் மறப்பான் குழந்தை...அவள் மடிமேல் அமர்ந்து பாட்டுக்கேட்பான். பாட்டி சுவரில் சாய்ந்துகொண்டு குழந்தையை மடிமேல் வைத்துக்கொண்டே

ஜோஜோ ரகுகுல திலகா
ஜோதிஸ்வரூபா ஆதிசேஷசயனு

என்று கம்பீரமாகப்பாடுவாள். குழந்தையும் ஜோஜோ என்று ராகமிழுக்கும். "நாதசமுத்திரத்தில் குண்டலிப்பாம்பின்மேல் பள்ளிகொண்ட ஓங்காரஸ்வரூபனே! என் களங்கமற்ற உள்ளத்தில் பள்ளிகொள்வாய்" என்று அவள் பாடும்போது பச்சைக் குழந்தைக்கும் ஞானம் உதிக்கும். குழந்தை அயர்ந்து தூங்கிவிடும்.

காலை நான்கு மணி ; தாயார், பாட்டி, எல்லாரும்,

மேலுகோ பூதேவி மேலுகோ ஸ்ரீதேவி
மேலுகோ ஸாம்ராஜ்யம் இச்சு லக்ஷ்மி

என்று தொடங்குவார்கள். பாட்டி "ரங்கநாயக ராஜீவ லோசன ரமண தெல்லவாரெ லோரா"என்று பாடுவாள். தகப்பனுர் "ஜயஜய கருணுப்தே ஸ்ரீமஹாதேவ சம்போ...என்று உருக்கமாக பிரார்த்தனை செய்வார்...சிவானந்தலஹரி, முகுந்தமாலை, பகவத்கீதை, புருஷசூக்தம், உபநிஷத்துக்கள், கைவல்யம் இவை வீட்டில் முழங்கும்....பக்கத்துவீடுகளில் வேதபாராயணம் நடக்கும். கோயில் மேளம் பௌளிராகம் முழங்கும்...குழந்தை இந்த நாதவேதத்தில் பரவசங் கொண்டு தன்னுல் எழுந்து கூத்தாடும்...

15. தன்னையறியவேணும்

இரண்டரை வயதுமுதல் நடந்ததெல்லாம் எனக்கு நினைவிருக்கிறது. முற்பிறப்பில் விட்டகுறைதீரவே எல்லாம் நிகழ்ந்தன என்பதை நான் இருபத்திரண்டாம் வயதில் கண்டேன். என் முதல் வழிகாட்டி ஒரு பண்டாரம். நான் உணவு என்று யாரையும் இன்றும் கேட்டதில்லை. உணவு என்னைத் தேடிவரும். தொட்டில் பருவம் தாண்டி நடக்கவந்த நாள்முதல், நான் வீட்டுக்குள் வசிக்க

விரும்பியதில்லை. திண்ணையில் அமர்ந்து, சூரியோதயத்தையும் கோயில் கோபுரத்தையும் நந்தவன மலர்களையுமே பார்ப்பேன். தெருவில் ஓடிச்சென்று, கோயிலுக்குள் போவேன். நடராஜா சந்நிதியில் உட்கார்ந்து ஏதேதோ உளறிக்கொண்டிருப்பேன். அந்திவானத்தைக் கண்கொட்டாமல் பார்ப்பேன். மதிநிலாவில் மகிழ்வேன். வீட்டில் பாடினால் கேட்பேன். கோயில் மேளம் கேட்டால் ஓடிப்போய்க்கேட்பேன். பிச்சைக்காரரையும் பண்டாரங்களையும் கூர்ந்து கவனிப்பேன்.

என் அக்காள் தோழிகளுடன் நிலாப்பூச்சி விளையாடுகிறாள். தெருக்கோடியில் இனிய பாட்டுக்கேட்டது....இரண்டு பண்டாரங்கள் பாடிவந்தனர். அப்போது அதன் பொருள் எனக்குத் தெரியாது ; பிற்காலம் அது இடைக்காட்டுச் சித்தர் பாடல் என்றறிந்தேன். அதன் ஒலிமட்டும் என் காதைவிட்டுப்போகவில்லை. நான் கேட்டது இதுவே:

எல்லாம் இருந்தாலும்—பசுவே
ஈசன் அருளில்லையேல்
இல்லாத் தன்மை என்றே—பசுவே
எண்ணிப் பணிவாயே...

இப்படிப் பாடிக்கொண்டே அவர்கள் எங்கள் வீட்டுவாசலுக்கு வந்தனர். நான் "இருங்கோ மாமா" என்று உள்ளே போன போது, அம்மா எனக்குச் சாதம் ஊட்டக் கிண்ணத்தில் கொண்டு வந்தாள். நான் "அம்மா! அந்த மாமா! சாதம் போடு" என்றேன் அம்மாள் கிண்ணியை திண்ணையில் வைத்து உள்ளே பழையது கொண்டுவரச் சென்றாள். அதற்குள் நான் கிண்ணிமுழுதும் பண்டாரங்களிடம் தந்து, "பாடுங்கோ பாடுங்கோ" என்றேன். அம்மா அவசரமாக ஓடிவந்தாள். பண்டாரங்கள் "அம்மா! இது ஞானக் குழந்தை" என்றனர். கிண்ணத்தை அம்மாளிடம் தந்தனர். அம்மாள் தான்கொண்டுவந்த பழஞ்சோற்றையும் போட்டுப் புன்னகைத்தாள். "பாடுங்கோ பாடுங்கோ" என்று நான் துள்ளினேன். அம்மாளும் "சித்தர் பாட்டுப்பாடுங்கோ ! குழந்தைகேட்கட்டும்" என்றாள். பண்டாரங்கள் கம்பீரமாகப் பாடினர். எனக்கு நன்றாக நினைவிருந்து மனதில் பதிந்த நான்கு அடிகள் இவையே. பல தடவை இவற்றைக் கேட்டிருக்கிறேன்.

ஒன்றைப் பிடித்தார்க்கே—பசுவே
உண்மை வசப்படுமே
நின்ற நிலையினிலே—பசுவே
நேர்மை யறிவாயே

தன்னை அறியவேணும்—பசுவே
காணாமல் காணவேணும்
பின்னை அறிவதெல்லாம்—பசுவே
பேயறி வாகுமடி....

இவை எனக்கு உபதேசமந்திரங்களாயின...பண்டாரங்கள் "இந்தக் குழந்தை நல்லாயிருக்கவேண்டும்" என்று சென்றனர். சில

ஆண்டுகளுக்குப்பிறகு இவருள் ஒரு பண்டாரம் என்னை அடையாளம் தெரிந்து, உடையார் ஊருணிக்கருகே இருந்த பண்டார மடத்திற்கு அழைத்துச்சென்றார். அங்கே தாயுமானர் நடந்தது. "தம்பி! இதுதான் வேதம்.... நல்லாப்படிச்சிக்கோ...

தேடும் திரவியமும் சேர்ந்தமணிப் பெட்டகமும்
கூட வருந்துணையோ கூறாய் பராபரமே.
ஓடும் இருநிதியும் ஒன்றாகக் கண்டவர்க்கே
நாடும் பொருளான நட்பே பராபரமே.
தன்னைஅறிந்தருளே தாரகமாய் நிற்பதுவே
உன்னை அறிதற்கு உபாயம் பராபரமே...

என்ற மூன்று ரத்தினங்கள் என் உள்ளத்திற் பதிந்தன. தாயுமானர் வாக்கு எனக்குக் கருணையொளி தந்தது.

16. ஜீவகாருண்யம்.

எந்த உயிரையும் தொந்தரவு செய்வதை நான் சகியேன். வீட்டில் நெய்க்கறசட்டியில் எறும்பு மொய்க்கும். ஒருநாள் வேணிப்பாட்டி எறும்புகளைக் காலில்போட்டுத் தேய்த்ததைக் கண்டேன். "ஐயோ எறும்பு செத்துப்போச்சே" என்று அலறினேன். "எறும்பு செத்தால் உனக்கென்னடா?" என்றாள்பாட்டி. "உன்உயிர் உனக்கு வெல்லம். அதன் உயிர் அதற்கு அருமை" என்றேன். "பின்னே என்னடா செய்வது எறும்பு வந்தால்?" "நீ சாமான்களைப் பாதுகாக்கவேண்டும். ஒரு தாம்பாள நீரில் கறசட்டியை வை; எறும்பு ஏறாது." ஒருநாள் நெய்ச்சாடியை மூடாமல் வைத்திருந்தார்கள். எறும்பு அதன்மேல் ஏறிக்கொண்டிருந்தது. நான் ஜாடியை எடுத்தேன். என்கையில் சில எறும்புகள் மொய்த்துக்கடித்தன. பொறுமையுடன், ஜாடியைக்கீழேதட்டி... ஒரு காகிதத்தில் சர்க்கரை வைத்து, அதில் எறும்புகளை மொய்க்கச் செய்தேன். அதை மெல்ல எடுத்து ஒரு புற்றில் கொண்டுவிடப் போனேன். அந்தச்சமயம் என் மூத்தண்ண "எண்டாபயலே! நெய்யா திருடுகிறாய்?" என்று வந்து மிரட்டினன். "இல்லை அண்ணா!" என்று விஷயத்தைச் சொன்னேன். "இனிமேல் நெய் திருடாதே போ"...என்று தலையில் ஒருதட்டுத்தட்டிவிட்டான்... பொறுத்துக்கொண்டேன்.

ரதசப்தமியன்று தாயாருடன் நானும் மடியில் குறுணைதவிடு இரண்டும் சேர்த்துக்கட்டிக்கொண்டு, தேர்வீதிவழியாகச்சென்று, எறும்புப்புத்துகளுக்குப் போடுவேன். தேர் நிலைக்குவந்தபிறகும் வீட்டுக்கொல்லையில், கொடுக்காப்புளி மரத்தடியில் எறும்புகளைத் தேடிக் குறுணைபோட்டுத்தான் சாப்பிடுவேன். நான் போடும் குறுணையை எறும்புகள் உண்பது கண்டு லக்ஷஜனபோஜனம் பண்ணியதுபோல் மகிழ்வேன். எறும்புகளின் சுறுசுறுப்பைக் கவனிப்பேன். அவை சரியாகச் செல்லும்போது எதிரேவரும் எறும்புகளைக்கண்ணோட்டி நட்பாடிச் செல்லும். மழைகாலத்திற்கு வேண்டியதை வெயிற்காலத்திலேயே பொந்தில் சேர்த்து வைக்கும்.

நானும் சிக்கனமாக வாழப் பழகுவேன். எதிலும் சிறிது மிச்சம்பிடிப்பேன். கொல்லையில் ஒரு தேன்கூடுஇருந்தது. அதைத்

தினம் கண்டு பயன்பெற்றேன். தேனீக்கள் பூக்களில் அமர்ந்து தேன் எடுத்துவருவதும் கூட்டில் சேர்ப்பதும் உண்பதும் ராணித் தேனீயை மதித்து நடப்பதும், முடிவில் சேர்த்ததேனைப் பிறர் உண்ணவிடுவதும் காண்பேன். ஒருநாள் கூட்டில் என்ன இருக்கிறதென்று பார்க்க மெல்ல விரலைவிட்டேன். சுரீர் என்றது. தேனீ என்னைக் கொட்டியது. புஸ் என்று பலதேனீக்கள் கிளம்பி வட்டமிட்டன. இதைத் தந்தை பார்த்தார். "அடடா! தேன்கூட்டைக் கிளறினாயா?...தேனீ கொட்டியதா?" என்றார். உண்மையைச்சொன்னேன். மஞ்சளும் உப்பும் அரைத்துப் போட்டுவிட்டு, தேன் கூட்டிற்கு அடியில் தீ மூட்டினார் தந்தை....தேனீக்கள் பொல பொலவென்று கிளம்பி சோககீதம் பாடிக்கொண்டே சென்றன. தந்தை ஒரு ஏனத்தில் தேனைப்பிடித்தார். எல்லாரும் தேனைப்பருகினர். நான் தொடவில்லை. "அத்தனை தேனீக்களை விரட்டியடித்த பாபம் நம்மை விடுமா? அப்படி நம்மை யாராவது தீவைத்து வீட்டை விட்டு விரட்டினால் எப்படியிருக்கும்?" என்று பரிந்து பேசினேன். "எதிலும் கொஞ்சம் பாபமும் இருக்கும். பகவானுக்கு நிவேதித்தால் சரியாய்விடும் என்றார்" தந்தை. "பகவானுக்கு நமது புண்ணியத்தையே நிவேதிக்கவேண்டும்; பாபத்தை அனுபவித்தேதீரவேண்டும்" என்றேன்.

அம்மா பொறிவைப்பாள். எலி சிக்கிக்கொள்ளும். அப்பா காலையில் திருபள்ளிஎழுச்சி பாடியதும், கம்பைத்தூக்கிகொண்டு எலியைக் கொல்ல வருவார். நான் அதற்கு முன்பே கவனமாக எழுந்து பொறியைக் கொல்லைக்குக்கொண்டுபோய் எலிவாலில் நூலைக்கட்டித் தூக்கி ஊருக்கப்பால் கொண்டு கற்றாழையில் விட்டு வருவேன். "போ! உன் அரசில் நீ இரு. வீடுகளுக்கு வராதே" என்று சொல்லுவேன். கட்டிலில் மூகட்டுப்பூச்சி கண்டால் எடுத்து, காகிதத்தில் மடித்து கொல்லைப்பக்கம் வைத்திருந்து, வெளியே போகும்போது கொண்டுபோய் கற்றாழையில் விட்டுவருவேன். அதை நசுக்க மனம் வராது. என் அருமைத்தோழர் பன்றி நாய் ஓணான் தட்டாரப்பூச்சி வண்ணாத்திப்பூச்சி பல்லி இவற்றை இமிசிப்பர். நாய்வேட்டை நாணு, பன்றிவேட்டை ராமு என்று அவர்களுக்குப் பட்டப்பெயருண்டு. பொடிடப்பி சீனு ஓந்திகண்ணில் பொடிதூவி'பாரடா வர்ணச்சித்திரம்'என்றுகாட்டுவான். ஓந்தி கண் சுழலும்; உடம்பு நிறம்பெயரும். அவன் வண்டுகளை நூலில்கட்டி சுழற்றுவான். இதையெல்லாம் நான் தடுப்பேன். "அடே! நம்மைப் போல் அதுவும் உயிரடா...வருத்தினால் பாபம்" என்பேன்.."யோகி, இங்கேவராதே! போ கோயிலுக்கு" என்பர் தோழர். நான் தெய்வ சந்நிதிசென்று 'உலகில் கொலை ஒழியவேண்டும்' என்று கடவுளை வணங்கி முறையிடுவேன். எனக்கு வீட்டிலோ தெருவிலோ என்ன இடர் ஏற்பட்டாலும், யார் திட்டினாலும், குட்டினாலும் நேராகக்கோயிலுக்குச் சென்று நடராஜா சந்நிதியில் முறையிடுவதே பழக்கமாய்விட்டது. இன்றும் எனக்கு வரும் இடர்களை வாய் விட்டுச்சொல்லாமல் பரமாத்மனிடமே முறையிடுவதுண்டு. ஆசிரியர் என்னை அடித்தால் பொறுப்பேன். ஆனால் மற்றப்பையன்களை

அடித்தால் அழுவேன். சிலமனிதரின் மிருகத்தனம் முகத்திலும் கண்ணிலும் காணும். நாய் நரி புலி பாம்புபோலிருக்கும். அத்தகைய முகங்களைக் காணவும் அஞ்சுவேன். பள்ளிக்கூடத்திற்குச் செல்லும் வழியே ஆட்டை அறுத்துப் பெட்டியில் சுமந்து செல்வர். எதிரேயுள்ள சந்தையிலேதான் அறுப்புச்சாவடி. அதைக்கண்டால் என் குடல் நடுங்கும்; சாப்பாடே வேண்டியிராது.

கொல்லா விரதம் ஒன்றே கொண்டவரே நல்லோர் மற்று
அல்லாதார் யாரோ அறியேன் பராபரமே.

என்ற திருவாக்கைப்பாடி உலகிலிருந்து கொலைபுலை ஒழிய பிரார்த்திப்பேன். புலால் உண்ணும் தோழர் மூச்சு விச்சமடிக்கும். வாய் பிணநாற்றமடிக்கும். நான் அவர்களைவிட்டுத்தள்ளி அமர்வேன். அல்லது வேப்பமரத்தடிக்குச் சென்று பிராணயாமம் செய்து வருவேன்.

ஒருதரம் எங்கள் வீட்டில் பூனை குட்டிபோட்டது. என் அண்ணு குட்டியைத்தூக்கிக் குறவனிடம் தரப்போனார். நான் அழுது கதறி, "அவன் கொன்றுவிடுவான்" என்று குறுக்கே விழுந்தேன். குட்டியைப்பறித்துக்கொண்டு கொல்லையில் வைத்து வளர்த்துவந்தேன். அந்தக்குட்டி என்பின்னே ஓடித்தாவி வரும் போது சந்தோஷப்பட்டேன்.

தாயார் பாடும் கீதாசாரத்தில்

தம்பித்தமயனுக்குச் சண்டையது வந்தாக்கால்
கும்பிக்குதித்தெழுந்து போர்செய்வார் க்ஷத்ரீயர்

என்றுவரும். அதைப் பாடிக்கொண்டே முத்தண்ணு சாதுவான சின்னண்ணுவை அடிப்பான், வைவான். அதைக்கண்டு நான் ஊடே விழுந்து அழுவேன். இருவரையும் விலக்குவேன். எனக்கும் அடிவிழும். இந்தக்காட்சி எனக்கு வைராக்கியமளித்தது....மாமா சேவகர்களை அதிகாரதோரணையில் மிரட்டும்போது, செல்வச் செருக்கை வெறுப்பேன். எல்லாரையும் என்போல் கருதும் மனப் பான்மையை நான் போற்றி வளர்த்தேன். பண்டிதர்கள் வாய்ச் சண்டை முற்றி நாய்ச்சண்டை போடுவதைக்கண்டு, படிப்பையே வெறுப்பேன். என் ஒரே லட்சியம் கடவுள், ஒரே பயிற்சி அன்பு, ஒரேசெயல் கருணை. இவையே எனது பயற்பருவத்தின் சாதனங்கள்.

புனித கைங்கரியத்தை ஆதரியுங்கள்.

இதுவும் ஒரு காந்தி ஸேவையாகும்

திருவல்லிக்கேணி மஹாத்மாஜி ஸேவா சங்கத்தின்
மாணவர் இலவசச் சம்பள நிதிக்கு நன்கொடையளிக்க
யோகி சுத்தானந்த பாரதியார் இயற்றிய

காந்தி கீர்த்தனம்

350 பக்கங்கள். ரூ. 3-8-0. உயரிய கிளேஸ் பதிப்பு.
இதைப் படித்தால் வாழ்க்கை புனிதமுறும்; சக்திபெறும்.
ஷை பதிப்பின் லாபம் சங்க இலவசச்சம்பள நிதிக்கே!
தர்மங்களில் மிகச்சிறந்தது வித்யாதானம்.

"பிச்சைக்குடுமியில் சன்யாசம் புகுந்தது"

லக்ஷ்மி:—என்ன ஸரஸ்வதி! நீ அன்று சொன்னதைப்பார்த்தால் மருமகப்பிள்ளைக்கு மிகவும் சொல்பமாகச் செய்திருப்பாய் என்று நினைத்தேனே. தடபுடலாக வெள்ளிக்கூஜா வெள்ளிவர் தட்டு முதலிய எல்லாம் செய்துவிட்டாயே! சிலரைப்போல் நீ 'அதைச் செய்யப்போகிறேன்; இதைச் செய்யப்போகிறேன்' என்று சொல்லிவிட்டு ஒன்றுமே செய்யாது அவமானப்படாமல், சொல்லாமல் செய்து வெற்றிபெற்றுவிட்டாய். எந்த விஷயத்திலும் இப்படித்தான் இருக்கவேண்டும்.

ஸரஸ்வதி:—வீண்படாடோபமே எனக்குப் பிடிக்காது லக்ஷ்மி! ஏதோ நம் சக்திக்குத்தக்கபடி செய்வதற்கும் நம் குழந்தைகளுக்குப் பரிமளிக்கச்செய்வதற்கும் பிறரிடம் தம்பட்டம் எதற்காக அடிக்கவேண்டும்? நம்முடைய ஆசையோ கோட்டைகட்டத்தான் துடிக்கிறது. அதைவெளியிட்டுப் பின் செய்யாதிருப்பது அவமானமல்லவா?...ஏது...பார்வதிகூட இன்று அபூர்வமாகவந்திருக்கிறாள்!

பார்வதி:—அபூர்வம் ஒன்றுமில்லை; வேலைதான் ஒய்வே இல்லை.

ஸர:—அதென்னம்மா அப்படிப்பட்டவேலை? ஆடிக்கு வந்த மருமகப்பிள்ளை இன்னும் போகவில்லையா?...

பார்:—மருமகப்பிள்ளைமட்டும் இருந்தால் தேவலையே. எப்படியோ நெருக்கிக்குறுக்கி என்குடும்பத்தைச் சிக்கனமாக நடத்தலாமே...பிச்சைக்குடுமியிலே சன்யாசம் புகுந்தமாதிரி யார்யாரோ வந்து உட்கார்ந்து உபத்திரவம் செய்வதால்தான் ஓய்வே இல்லை.

லக்ஷ்மி:—பேஷ்; ஸரஸ்வதி! பார்த்தாயா பழமொழியை?... பிச்சைக்குடுமியில் சன்யாசம் புகுந்ததாம்! இந்தப் பழமொழிக்கு ஏதாவது உருவம்இருக்கிறதா?...பிச்சைக் குடுமியாவது. அதில் சன்யாசம் புகுந்ததாவது?...இதே பழமொழியை பின்னும்சிலர் எப்படி சொல்கிறார்கள் தெரியுமா? பிச்சைக் குடுமியில் சனீச்வரன் புகுந்த மாதிரி.... என்கிறார்கள்...

ஸர:—இதென்னவேடிக்கை லக்ஷ்மி! சன்யாசமும் சனீச்வரனும் ஒன்றுமே புரியவில்லையே! இந்தப்படி இருக்கவேண்டும என்பதை அறியாமலேயே நாங்கள்கூட இப்படித்தான் சொல்கிறோம்...

பார்:—பலேபேஷ்!....குருவிக்கேற்ற ராமேச்வரம்போல் இது சனீச்வரமா?...இதன் உண்மைப் பதம் ஏது லக்ஷ்மி?

லக்ஷ்மி:—இந்தப்பழமொழிக்கு சன்யாசம், சனீச்வரன் என்ற இரண்டு பதங்களையும் உபயோகப்படுத்துகிறார்கள். இரண்டிற்கும் பிச்சைக் குடுமியே முதலாக இருக்கிறது.குடுமிக்கும் பின்வரும் பதத்திற்கும் லவலேசமும் பொருத்தமே இல்லை. இதை ஊன்றிப் பார்த்தால்,"பிச்சைக்குடிசையில் சனீச்வரன்புகுந்ததுபோல்"என்பது தான் சரியான பதமாக இருக்கவேண்டும். குடிசைஎன்பது குடுமியாகச் சிதைந்துவிட்டது. மற்றொரு வார்த்தைக்கு எப்படி இருக்கவேண்டுமென்றால் "உச்சிக்குடுமியில் சன்யாஸம் புகுந்தமாதிரி" என்றால் பொருந்தும். வெகுசிறியதாக உச்சிக்குடுமி வைத்திருப்பவன்

சன்யாசியாகிவிட்டால் அவன் முழுமொட்டையாகிவிடவேண்டும். அல்லது ஜடைபோட்டதலையும் தாடி மீசையுமாக மாறிவிடவேண்டும். இதனால் உச்சிக்குடுமி மறைந்தோ, அதிகப்படி வளர்ந்தோ இருப்பதைப்போல் குடும்பத்தில் நெருக்கடியான நிலைமையை அதிகச்செலவை—அனுவச்யச்செலவைக் காட்டுவதாக அர்த்தமாகிறது....ஏற்கெனவே பிச்சைக்குடிசையில் தரித்திரத்திற்குக் கேட்கவேண்டாம். அதில் சனீச்வரனும் கூடச்சேர்ந்து ஏழரைநாட்டான் ஆட்டினால் அக்குடிசையும் குடும்பமும் எப்படித்தான் இருக்கும் என்ற பாவத்தைவைத்தே "பிச்சைக்குடிசையில் சனீச்வரன் புகுந்தாற்போல்" என்றும், "உச்சிக்குடுமியில் சன்யாசம் புகுந்தாற்போல் என்றும் பழமொழிகளை இட்டுத் தத்தம் சுகதுக்கங்களை மக்கள் பேசியிருக்கிறார்கள். அதன் உண்மை அர்த்தத்தை அடியோடு மறந்து எதையோ ஒன்றைக்கூறி அதையே பழமொழி என்று நம்பி வழக்கத்தில் கொண்டுவந்துவிட்டார்கள்.

ஸர:—அடேயப்பா! எந்த அர்த்தத்திற்கு எந்த பதத்தை உபயோகித்து எப்படிச் சிதறவடித்துவிட்டார்கள் பார்த்தாயா? இதற்குத்தான் எந்தப் பழமொழியை உபயோகித்தாலும் நன்றாக யோசித்து பாவத்தை அறிந்து பேசவேண்டும் என்பது.

எழுத்தாளர்:— எங்கேடா என் மேனஸ்க்ருப்டையெல்லாம் கட்டித் தூக்கிண்டு போறே?

வேலையாள்:— வாசல்லே பேப்பர்காரன் வந்திருக்காங்க. அம்மா பத்திகை ஆபீஸுங்களிலேருந்து திரும்பின உங்க கட்டுகளையெல்லாம் எடைபோட எடுத்தாரச் சொன்னாங்க!

—பூச்சி சீனு.



5

"மாணிக்கம்! மாணிக்கம்! இங்குவா!" என்று சற்று கரகரப்பானகுரலில் சர்மா வேலைக்காரியைக்கூப்பிட்டார். கிழவி ஓட்டமாகஓடிவந்து வணக்கத்துடன் நின்றாள். "எங்கே தேவகியும் தேவநாதனும்? மணி 5 ஆகிவிட்டது. டீபார்ட்டிக்கு வருகிறவர்கள் வரும்நேரமாகிவிட்டதே" என்றார்.

மாணிக்:—குழந்தைக்குஇன்று பள்ளிக்கூடத்தில் ஏதோ நிகழ்ச்சியில் பங்கு இருக்கிறதாம். அதனால் வருவதற்கு 7 மணிக்கு மேலாகும் என்று சொல்லிவிட்டுப் போயிற்று. இருந்து அவளை அழைத்துவருவதாக தேவநாதன் போயிருக்கிறார்.

சர்மா:—தடிப்பசங்கள். வீட்டில் ஒருமுக்யமான ப்ரமுகருக்கு மரியாதைகாட்ட விசேஷம் நடக்கும்போதுகூட இருந்து கவுரவிக்க புத்தியில்லாமல் பள்ளிக்கூடத்தில் கூத்தாடப்போனாளோ? வீட்டில் வருபவர்களுக்கு மரியாதை செய்யவேண்டுமென்பதை நீதான் சொல்லி என் நிறுத்தியிருக்கக்கூடாது?'...என்று கர்ஜனை செய்கையில், வாசலில் கார்வந்துநின்ற ஓசைகேட்டு ஓடிச்சென்று வந்தவர்களை உபசரித்து அழைத்துவந்து விருந்துக்காக ஏற்பாடுசெய்திருந்த இடத்தில் உட்காரவைத்தார்.

தன்னுடைய பெண்ணும் பிள்ளையும் செய்துள்ள காரியத்தைக் கண்டு உள்ளம் கொதிக்கும் உணர்ச்சியைக் காட்டிக்கொள்ளாமல் ப்ரயாஸைப்பட்டு அடக்கிக்கொண்டு வந்தவர்களிடம் வெகு அன்பாய் சிரித்தமுகத்துடன் பேசவாரம்பித்தார். எனினும் உள்ளுக்குள் இதயத்தில் செய்யும் வேலையின் ஓட்டம் அடிக்கடி முகத்தில் லேசாகத் தெரியாமலில்லை. சிறிதுநேரத்திற்குள் வரவேண்டியவர்கள் எல்லோரும் வந்துவிட்டார்கள். கும்மாளமடித்துப் பேச்சும் கூச்சலுமாக சிற்றுண்டி விருந்து ஆரம்பித்தாயிற்று.

வந்தவர்களில் ஒருவர் "ஏன் சார்! நானும் இதோடு மூன்று தரமாகப்பார்க்கிறேன். வீட்டில் நடக்கும் விருந்தில் உங்கள் பெண்ணும் பிள்ளையும் கலந்துகொள்வதில்லையே! ஏனப்படி? எங்கே உமதுமகள் தேவகியைக் கூப்பிடும். அவள் வெகு இனிமையாகப் பாடுகிறாளாம். கேட்கலாம்" என்றார்.

ஏற்கெனவே புகைந்துகொண்டிருக்கும் சர்மாவுக்கு இதைக் கேட்டதும் பின்னும் ஆத்திரம் வந்துவிட்டது. சற்று உரத்தகுரலில், "என்ன பள்ளிக்கூடம்! என்னபடிப்பு சார்? பள்ளிக்கூடமென்றால் சரியானபடி பெண்களுக்குரிய பாடங்களையும், கணிதம், பூகோளம் முதலிய விஷயங்களையும் சொல்லிக்கொடுத்து அவர்களை அறிவாளிகளாக்கினால் தேவலை. அதை விட்டுவிட்டு எப்பொழுதுபார்த்தாலும் நாடகமும் நாட்டியமும் சங்கீதமும்! அந்தவிழா! இந்தவிழா! அவாளுடையநாள்! இவாளுடைய நாள்!..பிறந்தநாள்! உத்யோகம் வகித்தநாள்! பட்டம் கிடைத்தநாள்...என்று இப்படியே

அக்கப்போர் நடந்துகொண்டிருக்கிறதேயன்றி நம்காலத்துப்படிப்பு போல் நன்ருகவே நடக்கிறதா சார்? இன்றுபள்ளிக்கூடத்தில் ஏதோ கூத்தாடுகிருர்களாம். அதற்காக அவனை நிறுத்திக்கொண்டு விட்டார்களாம். எனக்கு முன்பே தெரிந்திருந்தால் அந்த நாடகத்திற்குப் போகவேண்டாமென்று தடுத்திருப்பேன். எனக்குத் தெரியாது" என்று ஆத்திரத்துடன் கூறினர்.

இதைக்கேட்ட மற்ருெருவர் "சார்! நீங்கள் சொல்வது நூற்றுக்கு நூறு சரியான வார்த்தை. இந்தக் காலத்தின்போக்கில் இடரிவிழுந்தால் சோடாக்கடைகளும் ஹோட்டல்களும் இருப்பது போல் பள்ளிக்கூடங்களும் விருத்தியாகிக்கொண்டுதானிருக்கின்றன. அதற்கேற்றுப்போல் பசங்களும் ஆட்டுமந்தை மாட்டுமந்தை போல் வந்து மேலே விழுகின்ருர்கள். பள்ளிக்கூடங்களும் பசங்களும் பெருகிவிட்டதுபோல் பணச்செலவும் அடேயப்பா! அபாரமாய்ப்பெருகிவிட்டது. மாதாமாதம் சம்பளம் கட்டுவதைத்தவிர சில்லரை சில்லரையாய் எத்தனை பணம் செலவழிகிறதுதெரியுமா? இவைகளைப் பார்த்தால் சிவனே என்று ஒரு ப்ரைவேட்டு வாத்தியாரைவைத்து வீட்டிலேயே படிப்பைச்சொல்லிக் கொடுக்கலாமா என்றுகூடத் தோன்றுகிறது" என்ருர்.

அதைக்கேட்ட இன்னெருவர் சார்! நாகரிகம் அதிகமாக ஆக விபரீதங்கள்தான் உண்டாகின்றன. அதிநாகரிக அலங்காரமும் போக்கும் மனிதர்களை வெகு சீக்கிரத்தில் கிழங்களாகச் செய்துவிடுகின்றன. ஏன் சார்! கடமை என்ற பத்ரிகையில் V. தேவநாதன் என்று யாரோ ஒருவர் மனிதன் பழுத்தால் என்ற ஒரு ரஸமான கட்டுரை எழுதியிருந்தார். அந்தப் பேரைப் பார்த்ததும் உமது குமாரனக இருக்குமோ என்றுகூட எண்ணினேன். அவனுக்கும் V. தேவநாதன் என்றுதானே பெயர்" என்று கேட்கும்போது, இவருடைய முகம் போகும்போக்கை என்னென்பது? மெல்ல அதைச் சமாளித்துக்கொண்டு "யாரு! V. தேவநாதனு?... நம்ம பையன் இம்மாதிரி அதிகப்ரஸங்கித்தனத்திற்குப் போகவே மாட்டான் சார்! ஒரே இனிஷலில் ஒரேபேரில் எத்தனையோ பேர்கள் இருக்கிருர்கள். ஏன்சார்! S. விச்வநாத சர்மா என்ற இதேபேரில் என் ஆபீஸில் என்னிடம் வேலைசெய்யும் குமாஸ்தா இருக்கிருன். சிலசமயம் என்னையும் அவனையும் சிலர் புரிந்துகொள்ளாமல் வேடிக்கைகள்கூட நடந்துவிட்டன. ஆளைப்பார்க்காத கிழ்ச்சிப்பந்திகளில் சிலர் என் குமாஸ்தாவை நான் என்று எண்ணி தடபுடல் மரியாதை செய்து நடந்துகொண்டார்களாம். பிறகு இது தெரிந்து சிரித்து வயிறு உப்பிவிட்டது. அதுபோல் ஒரே இனிஷலும் பெயரும் உள்ளவர்கள் எத்தனையோ பெயர் இருக்கிருர்களல்லவா? எவனே பொழுதுபோகாத ஜடப்ரக்ருதி இம்மாதிரி எழுதி காகிதத்தையும் மையையும் வீணுக்குகிருன். எனக்கு இம்மாதிரி வ்யாபாரமே பிடிக்கிறதில்லைசார்!" என்ருர்.

இதைக்கேட்ட இன்னொருவர் "சார்! அந்தகட்டுரை எனக்கு மிகவும் பிடித்தது சார்! இந்தகாலத்தின் விபரீதமான நாகரிகத்தின் போக்கில் கிழவர்களைக் கிழவர்கள் என்று அறியவே முடிவதில்லை. பகவானால் கொடுக்கப்பட்ட பல்லு சற்று ஏற்றத்தாழுமாகவோ, எடுப்பாகவோ! தேசலாகவோ! பலவிதம் இருக்கலாம். ஆனால் நவீனபகவானாகிய பல்டாக்டர் கொடுக்கும்பல்லோ! அடாடாடா அரிசி அரிசியாய் எத்தனை அழகாயிருக்கிறதுபாருங்கள். அந்த முறையில் 100 வயதான தாதாவும் சரி. பாட்டியும் சரி. பளபளப்பான பல்லும் கருகருவென்ற தலையும் சிறுபிள்ளைகள் பெண்கள் போல் ஆய்விடுகிறார்கள். ஆனால் அப்படி ஆய்விடுவதாக அவர்களுடைய நினைப்பேயன்றி கிழம் கிழந்தான் என்று சொல்லும் போது எல்லோரும் கடகடவென்று சிரித்தார்கள்.

சர்மாவுக்கோ பாவம் முகத்தில் அசடுவழிகிறது. பல்லைக் கடிக்க ஆத்திரம் பிறக்கிறது. செட்டுப்பல் எங்கே பலர் முன்னிலையில் மானத்தை வாங்கிவிடுவதுபோல் கழண்டு விழுந்துவிடுமோ என்கிற பயத்தினால் சமாளித்துக்கொண்டு மெல்லப்பல்லை இளித்துப் பார்த்தார்.

"விருந்துகிடைத்ததே என்று தின்றுவிட்டுப் போகாமல் வம்பு பேசுவது வேறையோ?' என்று சர்மாவின் உள்ளத்தில்குமுறுகிறது. இதைப்பின்னும் தூண்டிவிடுவதுபோல் இன்னொருவர் பேசத் தொடங்கி "சார்! அந்தக்கட்டுரையின் பின்பாகம் இன்னும் வெகு ருசியாயிருக்கிறது. அதாவது ஆண்களாகட்டும்; பெண்களாகட்டும், சிறியவயதில் அவர்களுடைய நினைப்பும், செய்கையும் எதிர்காலதைப்பற்றி நினைப்பதேஇல்லை கண்டதேகாட்சி; கொண்டதே கோலம் என்ற துள்ளலில் இந்த வயதும் சரீரமும், யௌவன முறுக்கும், பளபளப்பும், திமிருடன் அழியாமல் என்றென்றும் இப்படியேதான் இருக்கப்போகிறது. இந்த சரீரமும் பழுக்கவே பழுக்காது; என்றும் இப்படியேயிருக்கும் என்ற திமிருடன் முடுக்காகக் காலத்தைக் கடத்திவிடுகிறார்கள். கொஞ்சம் வயது ஏறஏற முதல் முதல் தேகக்கட்டு தளருகிறது. பிறகு தலைவெளுக்கிறது. அதன் பிறகு சரீரம் சுருங்குகிறது. பல்லைப்பற்றிக்கேட்கவேண்டாம். அதற்கு காலவரம்பே இல்லாது டிக்கட்டுவாங்கிக்கொண்டு அழகு பல்லலங்காரம் செய்துக்கொள்கிறது. அதற்குத் துணையாக கண்களின் போக்கும் இருக்கிறது. கண்ணாடி இல்லாத கண்களைப் பார்ப்பதே அரிதாகவிருக்கிறது. அதிலும் கண்ணாடிகளின் பருமனைப்பார்த்தால் பயமாக இருக்கிறது. மனிதன் எதிர்காலத்தையும் சற்று நினைத்துப் பார்க்கவேண்டும். இந்தசரீரமும் இந்த முறுக்கும் இப்படியே இருக்காது. என்பதை நினைத்து அதற்கு ஏற்றாப்போல் வாழ்க்கைப்பாதையைச் செப்பனிட்டு நடத்தினால் எத்தனையோ பயனுண்டாகும். வாலிபமுறுக்கு அழிந்தபிறகு நிலைக்கண்ணாடியில் தலையையும் பல்லையும் சுருங்கிய தோல்களையும் பார்த்தால் லாபமென்ன?" என்று இன்னும் ஏதேதோ அழகாக எழுதியிருக்கிறது சார்!"

என்று அந்த மனிதன் மெஷின்போல் பேசுவதைக் கேட்கக் கேட்க குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுவென்பதுபோல் தன்னைத் தான் சுட்டிக்காட்டிச் சொல்வதாக ஒரு தோற்றம் உண்டாகி முகத்தில் அசடுவழிந்து ஏதோமாதிரி விகாரப்பட்டுவிட்டது. அதை மெல்ல சமாளிப்பதற்காக வார்த்தைகளை மாற்றிவேறு வழியில் திருப்பமுயன்று "ஏன் சார்! பேச்சு ஸ்வாரஸ்யத்தில் தட்டிலிருப்பது அப்படியே இருக்கிறதே இன்னும் கொஞ்சம் எடுத்து சாப்பிடுங்கள் சார்! இந்த புதிய பக்ஷணம் இன்றுதான் செய்திருக்கிறது. இது எத்தனை நன்றாக இருக்கிறது பார்த்தீர்களா?" என்று எதையோ ஒன்று பேசினால் போதுமென்று கேட்டு வைத்தார்.

அங்கு சாப்பிடுகிறவர்களிலேயே சிலர் இவருடைய உள்ளத் துடிப்பையறிந்து கமட்டுச்சிரிப்பு சிரித்தார்கள். சர்மாவுக்கு இத்தனை நாள் இருந்ததுபோல் விருந்து விஷயத்தில் ஒரு தனித்த குஷி உண்டாகவே இல்லை. தன்மகனுடைய வேலையில் ஆவேசம் வந்திருப்பதோடு இந்தபார்ட்டி முடிவதற்குள் அவன் வராதிருக்கவேண்டுமே என்கிற கவலையும் வந்துவிட்டது. இந்தகட்டுரை பற்றிய வார்த்தை மறுபடியும் வந்து நான்தான் எழுதினேன் என்று எங்கு வெளியிட்டுவிடுவானோ என்கிற பயமும் துடிதுடிப்பும் உண்டாகியதால் சீக்கிரம் இந்த வைபவம் முடிவதையே அவர் விரும்பி எதிர்பார்த்தார்.

வழக்கத்தைப் போல் சந்தோஷமோ, உத்ஸாகமோ இல்லாத சப்பிட்டமுறையில் விருந்து ஒருவாறு முடிவடையும் சமயம் சர்மாவின் பயத்திற்கு ஏற்றாப்போல் தேவநாதனும் தேவகியும் பேசிக்கொண்டே, வீதியில் வரும் குரல் கேட்டு தான் சொல்லிய பொய் எங்கே வெளியாகிவிடுமோ என்கிற பயத்தினால் தவிக்கிறார். முகம் சுளித்துவிட்டது. இதற்குள் தேவநாதனும் தேவகியும் படி ஏறி வந்துவிட்டார்கள். விருந்து சாப்பிட்டவர்களும் எழுந்து போவதற்கு வீதிப்பக்கம் வந்தார்கள். தேவநாதனைப்பார்த்ததும் "என்னப்பா! இத்தனைநேரம்? உன் வீட்டில் நடக்கும் விருந்தில் நீ இல்லாதுபோவது நன்றாயில்லையே!" என்று கேட்டார் ஒருவர்.

தேவ:—ஏன்! நானும் ஒரு விருந்தில் தான் கலந்துகொண்டு பூர்த்தி செய்துவிட்டு வருகிறேன்." என்றதும் அவர்கள் ஆச்சரியத்துடன் "என்ன! என்ன! அப்பா ஒரு விருந்து, பிள்ளை ஒரு விருந்து இரண்டு விருந்தா நடக்கிறது? நீ எங்கு செய்தாய்? ஹோட்டலிலா! காலேஜிலா?"...என்றார்கள்.

தேவ:—இரண்டிலும் இல்லை. அங்கு செய்வதெல்லாம் புளி ஏப்ப அஜீர்ணக்காரர்களுக்குச் செய்யும் விருந்தாகும். அம்மாதிரி விருந்துகள் செய்ய நான் சம்மதிக்கவும் மாட்டேன். நினைக்கவும் மாட்டேன். ஒரு நாளைக்கு ஒருதரம் கூட கஞ்சியையோ புளித்ததண்ணீரையோ கூட பருகி தமது அகோரமான பசியைத் தீர்த்துக் கொள்ள வழி இல்லாத நித்யதரித்திர ஏழைகளுக்கு—பசி

யின் கொடுமையை உள்ளபடி அனுபவித்து அறிந்து ருசியுடன் உண்டு களிக்கும் ஏழைகளுக்கு—நான் விருந்து செய்துவிட்டுவருகிறேன். அவர்கள் இதோ மேஜையில் எச்சில் செய்து மிச்சம் பண்ணிப்பாழாக்கி இருக்கிறதுபோல் செய்யமாட்டார்கள். பிறவிக் குருடனுக்குப் பிறகுகண்வந்ததுபோல் ப்ரம்மானந்தத்துடன் புசித்துவிட்டு வயிறார வாழ்த்திக்கொண்டு சென்றார்கள். அந்த பேரானந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டே நின்றதில் நேரமாகிவிட்டது...

என்று முடிப்பதற்குள் அங்கிருந்தவர்களில் ஒருவர், "ஏம்பா! நீ இத்தனை அதிக ப்ரஸங்கியாயிருப்பாய் என்று நாங்கள் நினைக்கவே இல்லையே! வீட்டில் தகப்பனார் ஒரு விருந்து நடத்துவதாவது. நீ ஒரு பிச்சைக்காரக் கூட்டத்தை மேய்ப்பதாவது...என்று சொல்வதை லக்ஷ்யமே செய்யாமல் தேவநாதன் விருவிரென்று மாடிக்குப்போய்விட்டான். இவனுடைய பேச்சும் நடந்துகொண்ட மாதிரியும் எல்லோருடைய உள்ளத்தையும் புண்ணாக்கியது.

—o—

188152

6

"மாணிக்கம்! அப்பா எந்த ஊருக்கு கேம்பு போயிருக்கிறார்? இந்த முறை எங்களிடம் சொல்லவே இல்லையே: உன்னிடம் ஏதாவது சொன்னாரா?" என்று தேவகி கேட்டாள்.

மாணிக்கம்:—இந்தமுறை என்னிடம் கூடச்சொல்லவில்லை. ஆபீஸிலிருந்து வந்ததும் அவசரத்தந்தி யொன்றுவந்தது; உடனே கிளம்பிப்போய்விட்டார். ஏதோ ஆபீஸ்விஷயமாக இருக்கும் என்று நினைக்கிறேன். அல்லது உனக்காவது, அண்ணாவுக்காவது வரன் தேடுவதற்குப் போயிருக்கிறாரோ என்னவோ! என்று கண்ணைச்சிமிட்டியபடியே சொல்லும்போதே தேவகி வெட்கத்துடன் ஓடிவிட்டாள். புள்ளிமான் துள்ளிஓடுவதுபோல் தேவகி ஓடும் அழகையும் அவளுடைய முகபாவத்தின் சோபையையுங் கண்டு மாணிக்கத்தின் உள்ளம் மகிழ்ந்தது.

அண்ணனும் தங்கையும் அன்று தகப்பனார் கண்டித்தபிறகு அவர் எதிரில் நெருங்கிப் பேசுவதே இல்லை. இன்று தகப்பனார் ஊரிலில்லாததால் தேவநாதன் ஏதோ ஆழ்ந்த யோசனையுடன் எழுதிக் கொண்டிருக்கையில் அவன் பக்கத்தில் அன்புடன் நின்றுகொண்டு அவன் எழுதுவதைக் கவனித்தாள். சிறந்தகட்டுரை என்பது தெரிந்ததும் மெல்லியகுரலில்..."அண்ணா! அப்பாவின் கோபத்திற்கும் விரோதத்திற்கும் ஏன் ஆளாகவேண்டும்? கட்டுரை எதற்காக அண்ணா எழுதுகிறாய்? அன்று அவருக்குவந்த கோபமும் விரோதமும் இன்னும் நீங்கியபாடில்லையே?" என்று சாந்தமாய்க் கேட்டாள்.

தேவநாதன்:—தேவகீ! இவருடைய ஞானமற்ற பூச்சிமிரட்டலுக்கு நான் பயந்து என்னுடைய கலாபிவ்ருத்தியைக் குறைத்துக் கொள்ளமாட்டேன். அப்பாவுக்குத் தெரியாமலிருப்பதற்காக என்

பெயரை மாற்றிச் சிலரைப்போல் புனைபெயர்வைத்துக்கொண்டிருக்கிறேன். இதோ! பார்: இதுதான் என்பெயர்! என்று கட்டுரையின் தலைப்புடனிருக்கும் பெயரைக் காட்டினுன்.

"கண்ணனின் அடிமை" என்ற எழுதியவரின் பெயரையும், "கல்யாணமா! கண்ணீரா" என்ற கட்டுரையின் தலையங்கத்தையும் பார்த்த தேவகி உண்மையில் சற்று திடுக்கிட்டவளாய், அண்ணனை உற்றுப்பார்த்தாள்.... அவளையறியாமல் கண்களில் மடமட வென்று நீர் பெருகிவிட்டது.

இது கண்ட தேவநாதன் "செல்வி! ஏனம்மா உன் கண் கலங்குகிறது. அப்பாவுக்கு நான் விரோதியாகிவிட்டேன் என்ற எண்ணிவிட்டாயா! அதனுல் உனக்கும் நான் விரோதியாகிவிடுவேனே என்று பயப்படுகிருயா! கண்ணு! என்னுயிரைக் கொடுத்தாவது உன்னை நான் என்றும் அன்புடன் நடத்தக் கடமைப்பட்டிருப்பதை அந்த கீதாசாரியன் தான் அறிவானேயன்றி மனிதர் அறியமுடியாது. அப்பாவின் போக்கைப்பார்த்தால் நம்முடைய கதிக்கு பெருத்த விபத்துத்தான் விளைந்துவிடுமோ என்று பயமாக இருக்கிறது. அதனுல்தான் மிகவும் பயப்படுகிறேன். என்னைப் பற்றி எனக்குக் கவலை இல்லையம்மா! உன்னைப் பற்றித்தான் நான் இரவுபகல் நித்திரையுங் கொள்ளாது வருத்தப்படுகிறேன். முதலில் நல்லஇடமாகப் பார்த்து உன்னைக் கல்யாணம் செய்து ஒருவரிடம் ஒப்படைத்துவிட்டால் பிறகு அப்பா எப்படி அலைந்துப் பாழாய்ப் போனுலும் பாதகமில்லை. "தேவகி! நீயோ சிறுமி, உலகமறியாத பேதை; நேற்று நான் ஏதோ சந்தேகத்தில் அப்பாவின் தனியறையை மாறுசாவியால் திறந்துபார்த்தேன். அவர் மேஜைக்குள்ளிருந்த பல கடிதங்களே அவருடைய போக்கையும் இத்தனை வயதாகியும் அதை அடியோடு மறந்து தான் ஒரு முறுக்கான வாலிபன் தான் என்று தன்னைத்தான் நினைத்திருக்கும் கண்மூடித்தனத்தையும் எடுத்துக்காட்டிவிட்டன. அதைப்பார்த்த பிறகுதான் இக் கட்டுரையை எழுத ஆரம்பித்தேன். கூடியசீக்கிரத்தில் நீயே உணரப்போகிருய். நீ கண்கலங்காதேம்மா! நான் என் கடமையைத் தான் செய்கிறேன். இந்தப் புனைபெயர் விஷயத்தை நீ யாருக்கும் சொல்லாதே. நான் அவசரமாக எழுதவேண்டும். நீ போய் உன் பாடத்தைப் படிம்மா!" என்று நல்லவார்த்தைகளைக் கூறியனுப்பிவிட்டு மறுபடியும் மும்முரமாக எழுத ஆரம்பித்தான்.

ஆபீஸ்விஷயமாக வெளியூர் சென்று திரும்பும் சர்மா, ரயிலை விட்டு இறங்கும்போது ஸ்டேஷனிலுள்ள புத்தகக்கடையின் வாசலில் தலையங்கங்களின் விவரங்களடங்கிய தாள்கள் தொங்கிக் கொண்டிருந்ததைப் பலர் கூட்டங்கூடிப் பார்த்துக்கொண்டிருந்ததைக் கவனித்துத் தானும் தலையை நீட்டிப் பார்த்தார். "கடமை" என்கிற பத்திரிகையில் கல்யாணமா! கண்ணீரா என்கிற தலையங்கத்தை சுவரொட்டி விளம்பரம்போல் ஒட்டித் தொங்குவதைப்பார்த்ததும் சர்மாவுக்குத் தூக்கிவாரிப்போட்டது.

இதே 'கடமை' என்கிறபத்திரிகையில் தன்மகன் எழுதிய கட்டுரை நினைவுக்கு வந்துவிட்டது. "கல்யாணமா கண்ணீரா?" என்கிறதலைப்பகமும் இவருடைய சந்தேகத்தைத் தூண்டிவிட்டதால் உடனே ஆத்திரத்துடன் ஒருபத்ரிகையை வாங்கிப்பிரித்துப் பார்த்தார். கண்ணனின்அடிமை என்ற பெயரைப்பார்த்ததும் தன் மகன் எழுதவில்லை என்று ஒரு சிறிது சாந்தி உண்டாகியது. எனினும் சந்தேகம் மட்டும் பூர்ணமாக விடவில்லை. வீட்டிற்கு வந்ததும் பத்ரிகையைப் படிக்கவாரம்பித்தார்.

"கல்யாணமா, கண்ணீரா?" என்கிற பதங்களைப் பார்க்கும் போதே வாசகமனீயர்களுக்கு என்மீது கோபம் வருவதை ஞானத்ருஷ்டியினுல் நான் அறிகிறேன். சுபமானவார்த்தையுடன் அசுபமான வார்த்தையைச் சேர்த்து எழுதுவதா? அபசகுனம்! அபசகுனம்! என்று உங்கள் வாயினின்றும் வார்த்தைகள் உதிர்வதையும் நான் கேட்கிறேன், உண்மைதான்: சுபமும் அசுபமும் சேரக்கூடாது என்பதை உலகம் மறுக்கமுடியாது. ஆனல், ஊன்றிகவனித்துப் படித்தீர்களானல் என்னுடைய தலைபங்கம் சரியானதென்றேதான் நீங்களும் ஒப்புக்கொள்வீர்கள். சுபமான கல்யாணத்தை நாம் செய்வதன் தத்வம் என்ன? குடும்பக்ஷேமம், சந்தான வ்ருத்தி, நாட்டிற்கு ப்ரஜா உத்பத்தியே அழகானசோபை. ப்ரஜா உத்பத்தி அதிகரித்தால் தொழில் வளம் வ்ருத்தியாகிப்பெருகும். தொழில் வ்ருத்தியானல் சுபீக்ஷமும் க்ஷேமமும் ஐக்யபாவமும் உண்டாகும். பரஸ்பர ஒற்றுமையும் நேசமும் வளரும். தேசத்திற்கு தேசம் இந்ததொழில் மூலம் வ்ருத்தியாகும் சரக்குகளை கவியரசர் பாரதியார் சொல்லியதுபோல் பண்டம் மாற்றும் முறையில் சமரசமும் வ்யாபாரத்துறையில் ஐக்யமும் உண்டாகும். தேசத்திற்கு தேசம் நேசமும் தொழிலும் வளரும் முறையில் கொடுக்கல் வாங்கல்; பிறகு சம்மந்தம்; பிறகு அந்தந்த தேசாசாரங்களின் முக்யமான சத் விஷயங்களை பரஸ்பரம் அறிந்துக்கொள்வது; முக்யமான சீர்திருத்தங்கள் செய்வது; தேசபக்தி, தெய்வபக்தி, த்யாகம், தருமம், சத்சங்கங்கள்; உயர்தர கலாசாரப்பண்புகள், முதலிய பல தத்துவங்கள் வளருவது—ஆகிய அனேக நன்மைகளையும் சுபங்களையும் நாடும் நாட்டுமக்களும் அடைவதற்கு முக்யமான லக்ஷ்யமே கல்யாணம் என்கிற சடங்கின் மூலம் ஏற்படுகிறது. இவைகளைத்தவிர பித்ருக்களின் ஆசிக்குப் பாத்திரமாவதும் முன்னேர்களைப் புத் என்னும் நரகத்தினின்று விடுவித்து மோக்ஷத்தை யடையச் செய்வதற்கும் மிகமிக சார்த்தகமானது கல்யாணம்.

மேலே குறிக்கப்பட்டவகையில் சகலமும் மங்களகரமாய் க்ஷேமமாய் ஆகவேண்டுமானல் முதலில் தம்பதிகளின் அன்யோன்ய வாழ்க்கையும், மணமகன் மணமகள் இருவர்களுடைய முன்னேர்கள் மனமொத்துத் தாமே பரிபூர்ணத்ருப்தியுடன் முன்னின்று நடத்தும் மணமே சிறந்த புஷ்பமணம் பொருந்திய திருமண

மாகும். மகனுக்குப் பிடிக்காமலோ, மணமகளுக்குப் பிடிக்காமலோ இருக்கும் நிலைமையில் கல்யாணத்தைச் செய்தாலும் அந்த தம்பதிகள் கல்யாணமானபிறகு கண்ணீரையே துணை கொள்ள நேரிட்டிருப்பதை நாம் உலகத்தில் ப்ரத்யக்ஷமாகப் பார்த்திருக்கிறோம். சம அந்துஸ்து இல்லாத அழகுக்காகவும் வீண் வெளிப் பகட்டுக்காகவும் மணக்கும் இடத்திலும் கண்ணீரையே துணை கொண்டிருப்பதைக்காண்கிறோம். வயது வித்யாஸமுறையில் சிறிய யுவதிகளைக் கிழங்கள் மணந்துகொள்ளும் பரிதாபகரமான இடங்களில் கண்ணீரைத்தவிர வேறு எந்த விதத்தில் அந்த இளம் பெண் வாழ்க்கையை நடத்த முடியும். இம்மாதிரி படுமோச பாதக நிலைமையின் கொடுமைப்பலனால் அனேக இடங்களில் விபரீதமான மனப்போக்கினால் விபசாரம், தற்கொலை, பதித்ரோகம், கணவனை வெறுத்து மேல்நாட்டார்போல் ரத்துசெய்து விடவேண்டும் என்கிற —நம் சமுதாயத்திற்கு சற்றும் ஒவ்வாத— செயலைவிரும்பி அதற்கே பாடுபடும் புத்தியும் பரபரப்பும் உண்டாவதும், பாவிய விதவைகள் அதிகரித்து நாட்டின் மங்களகரம் குறைவதும் பிறகு விதவாவிவாகம் என்கிற அரைச்சம்மத அமங்களத்தில் மங்களத்தைப்புகுத்தும் நூதனமுறையைக் கையாளத்துணிவதும், அக்ரமமாகக் கரு உண்டாகிக் கருஹத்திசெய்வதும், அல்லது திக்கற்ற அனாதைப்ரஜைகளை உற்பத்திசெய்யத்துணிவதும்; அப்பப்பா!... அளவுக்குக்கட்டுப்படாத அக்ரமங்கள் வளர்ந்துவிடுகின்றன.

அத்தகைய அக்ரமங்களையே செய்யும் படுபாவிகள் தாம் செய்வதே தர்மமான காரியம் என்கிற எண்ணத்துடன் ஜயபேரிகை வேறு அடித்துச்செய்வதும், பிறகு அதுவே அவலத்தையும் அபசகுனத்தையும் காட்டும் அபஜெயபேரிகையாய்....பிணபேரிகையாய் முழங்குவதையும் பார்க்கப்பார்க்க உள்ளம் துடிதுடிக்கின்றது.

அக்கினி சாக்ஷியாக மணந்த தம்பதிகள்கூட காலவரம்புக்குக் கட்டுப்பட்டு இல்லறதர்மத்தை அறநெறிதவறாத சிறந்த முறையில் அனுசரித்துக் குடும்பவிருத்திக்கான புத்திரசெல்வங்களைச் சேகரித்த பின்பு வானப்ரஸ்தம் என்றும் ப்ரம்மசரியம் என்றும் ஜிதேந்திரியர்களாக வாழ்க்கையை நடத்த திட்டம் வகுத்துக்கொண்டு மகோன்னதநிலையில் நம்முன்னோர்கள் இருந்துவந்த இந்தநாட்டில் அதே மனித இனத்தில் பிறந்த சில மிருகங்கள் சன்யாஸங் கொள்ளும் சமயத்தில் வெட்கமின்றி விவாகத்தைச் செய்துகொள்ளத்துணிவதால்தான் தேசத்தில் க்ஷாமம் அதிகரித்து க்ஷேமத்திற்குக் கேடு விளைவிக்கின்றது என்பதை நன்கறியவேண்டும்.

மனைவியாகிய உத்தமிகளுக்கொரு நியாயம். கணவனாகிய தூர்த்தனுக்கொரு நியாயமா! கணவனை இழந்த மனைவிக்கு அதோடு சகலமங்களமும் முடிந்துவிட்டதாகக்கூறும் நியாயமும் சாஸ்திரமும் சட்டமும் மனைவியை இழந்த கணவனுக்குமட்டும் இல்லையா! தன்னுடைய மகாலக்ஷ்மியே மறைந்தபிறகு அந்த மனிதன்தான் உண்மையில் விதவையேயன்றி அவனுக்குமட்டும்



எப்படி மங்களகரமும் மறுவிவாகமும் உண்டாகமுடியும்? விதவையான புருஷன் ஒருவிதவையையே மணந்தால் அதையாவது ஒருவாற ஒப்புக்கொள்ளலாம்...

என்று சர்மா படிக்கும்போது தேகம்பூராவும் அப்படியே பற்றிஎரிவதுபோலான எரிச்சலும் ஆத்திரமும் பொங்கிஎழுந்தன. எந்தக் கம்மனுட்டிப்பயல் வெகுவாய்த் தெரிந்துவிட்டதுபோல் கர்வம் பிடித்து எழுதிவிட்டான்? கண்ணனின் அடிமையாம்! களிமண்ணின் அடிமையாம்! மடையன்! அடிமுட்டாள்!! இந்த அல்பாயுஸுதடியன் யாராகவிருக்கும்?' என்று வாய்விட்டுத்திட்டிய வாறு திரும்பிப்பார்க்கையில் இவரெதிரில் சிறிது பரிசயமான ஒருவர் நிற்பதைக்கண்டு முகத்தில் அசடுதட்டப் பல்லைஇளித்துக் கொண்டு "ஹி. ஹி...வாருங்கள்! உட்காருங்கள்!" என்றார்.

வந்தவரும் பல்லிளித்தபடியே உட்கார்ந்து..."எப்போவந்தீர்களோ? நேற்றுகூட ஒருமுறை வந்தேன். பத்திரிகையில் என்ன விஷயம் வந்திருக்கிறது? இது எந்த பத்ரிகை? டெண்டர் விஷயம் ஏதாவது போட்டிருக்கிறதா?"...என்றார்.

சர்மா:—டெண்டருமில்லை; ஒண்டருமில்லை. ஏதோ உதவாக்கரைப் பத்திரிகை; ரயிலில்வரும்போது போதுபோகவில்லை; எவனோ ரயிலில் படித்துக்கொண்டிருந்தவன் தானாகவலுவில் "சார்! பத்திரிகை வேணுமா...படிக்கிறீர்களா?" என்று கேட்டான். மரியாதைக்கு அதை வாங்கிக்கொண்டேனேதவிர நான் இதைப் படித்தேனா என்ன? இதில் நாம் படித்து அறியக்கூடிய விஷயம் என்ன சார் இருக்கிறது?—என்று அலக்ஷியமாகக் கூறித் தப்பித்துக்கொள்வதாக எண்ணி, அந்த எண்ணத்தில் த்ருப்தியும் அடைந்துவிட்டார். அனேக ப்ரக்ருதிகள் இதே ரகத்தில் இருப்பதை நாம் ப்ரத்யக்ஷமாகப் பார்க்கிறோம்.

வந்தவர்:—அந்தரோட்டுபோடும் டெண்டர்விஷயம் ஒருவழியாய்முடிந்துவிட்டதா சார்! அதைத்தெரிந்துகொள்ளவே வந்தேன்.

சர்மா:—அதை முடிப்பதற்காகத்தான் அவசரமாக நான் வெளியூருக்குப் போனேன். இதோ விவரங்கள் எழுதிய தாள் இருக்கிறது. இதில் புரியும். 10,000 ரூபாய் அப்படியே வைத்துவிடுவதாயின் இன்றே முடித்துவிடலாம். உம்முடைய பேரிலேயே சகல காண்ட்ராக்ட்டும் முடித்துவிட்டேன். செக்கு எழுதாமல் ரூபாயாய் எண்ணிவிடும். இவ்விஷயம் வெளிவந்துவிடுமானால் உமது ரகஸ்யம் அம்பலமாகிவிடும் என்பது நினைவிருக்கட்டும். இந்த விஷயம் உம்மைத்தவிர வேறுயாருமறியக்கூடாது....என்று சொல்லும்போது....

"மனிதனை மனிதன் ஏமாற்றிவிடலாம். அதன் பலாபலனையும் அவர்கள் அடைந்து அவதியும் உறலாம். ஆனால், நம் எண்ணத்திற்கும் கண்ணுக்கும் புலனாகாமல் அணுக்குள் அணுவாய், அண்டத்திற்குள் அண்டமாய் அங்கிங்கெனாதபடி எங்கும் வ்யாபியாய் ஆனந்தமூர்த்தியாய் எழுந்தருளியிருக்கும் ஜகத்ரக்ஷகனை எவராலும் ஏமாற்றிவிடமுடியாது. அவருடைய காதுகளை எவராலும் செவிடாக்கிவிடவோ, கண்களைக் குருடாக்கிவிடவோ முடியாது. நம் கண்முன்பு காணும் சுவர்களும் கதவுகளும் மனிதனால்

செய்யப்பட்ட கேவலமான வஸ்துக்களேயன்றி பகவானை மறைக்கும் சக்தி அவைகளுக்குக் கிடையாது. அதோடு ஆங்கில மகா கவி ஒருவர் சுவருக்கும் காது உண்டு என்கிறார்! மனிதனால் செய்யப்பட்ட சுவருக்கே காது இருக்கிறது என்றால் எங்கும் வ்யாபியாயிருக்கும் பகவானைப்பற்றிக் கூறவேண்டுவதே இல்லை. அவனன்றி ஒரு அணுவும் அசையாது. அவனறியாது எந்தகாரியத்தையும் யாராலும் செய்யமுடியாது. அவனில்லாத இடமே இல்லை. ஒவ்வொரு மனிதனுடைய இதயத்திலும் அவன் கோயில்கொண்டிருப்பதை முதலில் அறிந்தால் எவனும் தீயவழியில் செல்வதற்குத் துணியமாட்டான். எந்த மனிதனும் தன்னுள் பகவானிருக்கிறான் என்பதையும் தான் காணும் எந்த வஸ்துவிலும் அந்தர்யாமியான ஆண்டவன் வஸிக்கிறான் என்கிற சிறந்த ஞானத்தையும் சிறிதாவது அறிந்துகொண்டால் அவன் மனம் அக்ரமவழியை நினைக்கவே பயப்படும். மனிதனை மனிதன் ஏமாற்றிவிடலாம்; மாயாவியான சர்வேச்வரனை யாரும் ஏமாற்றமுடியாது என்பதை உணர்ந்து நடக்கவேண்டும்.

வஞ்சித்து ஒழுகும் மதியிலிகாள்! யாவரையும்
வஞ்சித்தோம் என்று மகிழற்க!—வஞ்சித்து
எங்கும் உளன்ஒருவன் காணுங்கொல் என்றுஎன்று
அங்கம் குலேவது அறிவு.

தெரிந்ததா!......சிஷ்யர்களே! இதைவிட முக்யமான உபதேசம் வேறு என்னவேண்டும்?''....

என்று ரேடியோவில் பெரியதாக அலறுவதை இருவருமே கேட்டு சற்று மவுனத்திலாழ்ந்தனர். சர்மா கோபத்துடன் எழுந்து ஹாலுக்குச் சென்று பார்க்கையில் தேவநாதன் ரேடியோவை வைத்துவிட்டு அதன் பக்கலில் வெகு ஸ்வாரஸ்யமாகக் கேட்டுக்கொண்டிருந்தான். உடனே சர்மா ரேடியோ ஸ்விச்சை நிறுத்திவிட்டு "வண்டா! அறிவு கெட்ட மடையா! உன் படிப்பும் பட்டமும் இந்த போதுபோக்கற்ற வீண்விஷயத்தில்தான் ப்ரவர்த்திக்கின்றதோ? இந்த லக்ஷணத்திற்கு காலேஜ் படிப்பு எதற்கு? அதை அடியோடு நிறுத்திவிட்டுத் தலைமுழுகிவிடேன். எப்போது பார்த்தாலும் இதே ரோதனைதானு?''...என்று கர்ஜித்துவிட்டு உள்ளே வந்தார்.

மறுபேச்சு எதுவுமே பேசாமல் தேவநாதன் பிதாவை ஒருதரம் விழித்துப்பார்த்தான். விடுவிடென்று உள்ளே சென்றான். வந்தமனிதர் பத்தாயிரம் ரூபாயை நோட்டுக்களாக எண்ணி சர்மாவிடம் கொடுத்தார். சர்மா அதை வாங்கித் தமது இரும்புப் பெட்டியில் பத்திரமாக வைத்துவிட்டு ரோட்டு கண்ட்ராக்ட் விஷயமான சகல காகிதங்களையும் அவரிடம் கொடுத்தனுப்பினார். "மிகவும் சந்தோஷம் சார்! நான் வருகிறேன்'' என்று கூறி விடைபெற்றுக் கொண்டார்.

சர்மாவின் வாழ்க்கையில் தர்மம் தானம் முதலியன செய்த தாக தப்பித்தவறிக்கூட ஒன்றுமே கிடைக்காது. ஆனால், பிறருக்கு ஏதோ காரியத்தைச் செய்துவைப்பதாகக் கூறும் முகாந்தரத்தில் இவர்பெற்றுள்ள லாபம் ஆயிரக்கணக்கானது என்பதை சர்மா வும் அவரைப் படைத்த கடவுளுந்தானறிவார்களேயன்றி வேறு யாருக்கும் தெரியாது. தனந்தேடி உண்ணுமல் புதைக்கவேண் டாம்; தருமத்தை ஒருநாளும் மறக்கவேண்டாம் என்கிற மந்திர வாக்கியங்களை சர்மா படித்ததாகக்கூட அவருக்கு நினைவு கிடையாது. சிலருக்குத் திருடத்தெரிந்தாலும் பதுக்கத்தெரியாது. சிலரோ, தாம் இம்மாதிரி லஞ்சம்வாங்கும் ரகஸ்யம் பிறருக்குத் தெரியாதவிதம் வெகுஜாக்கிரதையாகப் பணத்தைப் பாதுகாப்பதில் நிபுணர்கள்.

லஞ்சம்வாங்கிய பணத்தினால் உடனே பொருளை வாங்கிவிட் டால்...பாங்கியில் கட்டினால் பிறர் அறியும்படியாகிவிடுகிறது. பிறருக்குக் கடன்கொடுத்தாலும் அன்னியர் அறியும்படியாகிவிடும். ஆதலால் இரும்புப்பெட்டியில் பதுக்கியும் வீட்டிற்குள் பூமியில் புதைத்தும் பூதங்காப்பதுபோல் காத்து சிலவருஷங்கள் சென்ற பிறகு ஒவ்வொன்றாக வாங்குவார்கள். சிலர் தம் காலத்திலே செலவுசெய்யக் கொடுத்துவைக்காமல் மறைந்தும் போய்விடுவது உண்டு. பின்னும் சிலரோ எத்தனைதான் பதுக்கியும், துர்ப்பாக்ய தசை விடாது தொடர்ந்துவர, அகப்பட்டுக்கொண்டு அவதியும் படுகிறார்கள்.

இதுபோல் இன்னும் எத்தனையோ விஷயங்கள் இருக்கின்றன. மேல்குறித்தவகையில் சர்மா, இரும்புப்பெட்டியே கர்ப்பக்ருஹ மாயும் பணமே கடவுளாயும் மதித்து அதில் கட்டுக்கட்டாய் நோட் டுக்களை வைத்து ரக்ஷித்துவரும் கர்த்தாவாகவே விளங்குகிறார். அதைப்பற்றி நினைப்பதே அவருக்குப் பேரின்பம். அதை அடிக் கடி திறந்துபார்ப்பதே பரமஸார்த்தகமும் பகவத்தரிசனம் செய்தது போன்ற த்ருப்தியும்! இப்போதும் அப்படியே பணத்தைவைத்துப் பூட்டிப் பெருமிதத்துடன் அவர் உள்ளம் பூரித்தது.

7

அன்று சர்மா ஆபீஸிலிருந்து வந்ததும் மேஜைமீது ஒரு கடிதம் இருப்பதைக்கண்டு ஆவலுடன் பிரித்துப்பார்த்தார். தன் மகனுடைய கையெழுத்தாகவிருப்பதுகண்டு, கோபத்துடன் படிக்கவாரம்பித்தார்.

"நமஸ்காரம்.

தன்முதுகின் கோணல் தனக்குத் தெரியாது என்பது பழமொழி ஒவ்வொருவரும் இந்த பழமொழியின் தத்துவத்தை யறிந்துவிட்டால் பிறர் பழிக்கவரமாட்டார்கள். உங்களுடைய போக்கு சிலதினங் களாக மிகுந்த கேவலமான நிலைமையிலிருக்கிறது. காலனுவுக்கு

உபயோகமற்ற மோசக்காரர்களும், திருடர்களும், அல்பர்களும் உங்கள் சபலமனத்தை யறிந்து தினம் ஒரு பெண்ணின் பெயரை முன்னிட்டு கல்யாணத் தரகராய் உங்களிடம் வருவதும் பேசுவதும், நீங்கள் அவர்களைத் தேடியலைவதும், உங்களைப் போன்ற உயர்ந்த உத்யோகஸ்தர்கள் பார்த்துச் சிரித்துப் பேசிக்கொள்கிறார்கள், பரிகஸிக்கிறார்கள். இந்த அவமானத்தைத் தாங்கள் சற்றும் அறியாமல் தினம் நாலு கல்யாணத்தரகர்களுடன் பழகுவதை தயவு செய்து நீங்கள் நிறுத்திக்கொண்டால் நன்றாகஇருக்கும். தாங்கள் விவாகம் செய்துகொள்வதை நாங்கள் ஏதோ விரும்பாதது போலும் தடையாகக்கூட இருப்பதாகவும் எங்களை நீங்கள் நினைப்பதாக அறிகிறேன். அம்மாதிரி நினைக்கவேவேண்டாம் .தாங்கள் தாராளமாகக் கல்யாணத்தைக் செய்துகொள்வதில் நாங்கள் எவ்வித தடையும் செய்யவில்லை. ஆனால், ஒரேஒரு வேண்டுகோள்! இன்றுதான் "கண்ணனின் அடிமை" என்கிறவர் எழுதிய கட்டுரையைக் கடமை என்கிற பத்திரிகையில் பார்த்தேன்.

கணவனை இழந்த மனைவி எப்படி விதவையாகிறாளோ, அப்படியே மனைவியை இழந்த கணவனும் விதவைதான் என்பதில் ஆக்ஷேபனையே இல்லை; இளம் மங்கையை—கன்னிகையை— மணம்புரிந்து கொண்டு கல்யாணத்தின் பரிசாகக் கண்ணீர்என்பதை யளிக்காமல் தாங்களும் 25, 30—வயதுடைய விதவையை மணந்துகொண்டு சந்தோஷமாகக் குடும்பம் நடத்துங்கள். இந்த விஷயத்தில் என்னுடைய உதவியையும் அளிக்கத் தயாராக இருக்கிறேன். என் சிநேகிதனுடைய சகோதரி ஒருத்தி— விதவை—அப்ஸரஸ்போல் அழகுடன் ப்ரகாசிக்கிறாள். மிகவும் நல்லவள்; வயது 30 ஆகிறது. அவளை நீங்கள் மணப்பதாயின் என் சிநேகிதனிடம் நானேகேட்டு முடித்துவிடுகிறேன். இம்மாதிரி தாங்கள் செய்தால் உலகமும் பரிகஸிப்பதற்குப் பதில் கொண்டாடிப் புகழும். இதைத் தெரிவிப்பதற்காகவே நான் துணிந்து இதை எழுதுகிறேன். குற்றமாயின் மன்னிக்கவும். உங்கள் விருப்பத்தைத் தெரிவித்தால் இன்றே பார்க்க வற்பாடுசெய்கிறேன். இங்ஙனம் தேவநாதன்"

என்றதைப்படித்ததும், த்ருபுவனத்தையும் எரித்த சிவபெருமானைப் போல் ஆக்கிரமும் மகனிடம் தீராத பகையும் உண்டாகியதால், முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க ஆவேசத்துடன் நேரே தன்மகனின் தனிவிடுதிக்குச் சென்றார். அங்கு அவனைக் காணாததால் அடங்காத கோபத்துடன் மறுபடியும் தன் விடுதிக்கு வந்தார். ஆவேசத்தின் வேகம் விபரீதமாகக் கொதித்ததால் உடனே ஒரு கடிதம் எழுதி அதை மகனுடைய மேஜைமீது வைத்துவிட்டுத் தான் டிப்பன்கூட சாப்பிடாமல் வெளியேபோய் விட்டார்.

பின்னும் அரைமணி நேரத்திற்கெல்லாம் தேவநாதன் வந்தான். தனக்குத் தன்பிதா கடிதம் எழுதியிருப்பார் அல்லது வரும்போதே வசைபகுமானம் கிடைக்கும் என்பதை அவன் எதிர்பார்த்தவாறே வந்தான். மேஜைமீது கடிதம் தரிசனம் கொடுப்

பதைக்கண்டதும் இவனுக்குச் சிரிப்பேதான் வந்தது. உடனே படிக்கவாரம்பித்தான்.

“அயோக்யப்பயலே! உனக்கிருக்கும் திமிரை நான் எந்த வழியில் அடக்கவேண்டுமோ அப்படி அடக்க எனக்குத் தெரியும். ஆனால், என்னுடைய உத்யோக கவுரவத்தையும் உன் க்ஷேமத்தையுங்கோரி நான் உன்னை வீட்டைவிட்டுத் துரத்தாது இருக்கிறேன். நாய்போல் போட்டதைத் தின்றுவிட்டு உன் காரியத்தைப் பார்த்துக்கொண்டு போவதைத்தவிர என் விஷயத்திலாகட்டும் மற்ற எந்த விஷயத்திலாகட்டும் தலையிட்டால் நீயும் நானும் சத்ருக்கள் போல் பிரிந்துதான் நிற்க நேரிடும். கர்வம் பிடித்த மடையா! விதவையை...மணக்கும்படி உபதேசம் செய்து எழுதிய கையை வெட்டி எறிவதில் பாபமே இல்லை. நீ மகாமேதாவி, சாஸ்திரம்படித்த சம்பன்னன்! மூதேவித் தடியனுக்கு இந்த வ்யாபாரங்கள் வேறா? மங்களமிழந்த மூதேவியை மணந்து மானங்கெட்டு வாழுவதற்கு நான் சில சீர்திருத்தவாதிகள் என்று சொல்லிக்கொள்ளும் உதவாக்கரை மனிதர்கள்போன்ற மூட்டாளல்ல. இனி இம்மாதிரி அதிகப்ரஸங்கித்தனம் செய்ய முன்வந்தால் உன் விதியை நீ அறிவாய்”...

என்று உப்புசப்பில்லாமல் ஆக்திரத்தில் சில பதங்களை மட்டும் கொட்டியளந்து கிறுக்கியிருப்பதைப் படித்து மீண்டும் சிரித்துக்கொண்டானேயன்றி அதைப் பொருட்படுத்தவே இல்லை. கடிதத்தை பத்திரமாக வைத்துவிட்டுக் கிழேவந்தான்.

மாணிக்கம்:—தம்பீ, தேவநாதா! அப்பா என்னமோ இன்று அசாத்ய கோபத்துடன் டிப்பன்கூடச் சாப்பிடாதுபோய்விட்டார். இரண்டுதரம் உன் ரூமுக்குப் போய்வந்ததைப் பார்த்தால் உன் மீதுதான் ஏதோ மகத்தான கோபமிருப்பதாகத் தெரிகிறது. முன்புபோல் நீ ஏதாவது பத்ரிகையில் எழுதிவிட்டாயா? கையில் ஒருபத்ரிகையும் கடிதமும் வைத்துக்கொண்டு அலைந்தார்...

தேவநாதன்:—(கடகடவென்றுசிரித்துவிட்டு) மாணிக்கம்! அப்பாவின் சபலபுத்தி நாளுக்குநாள் கொழுந்துவிட்டு வளருவதை நீ அறியாததன்று. அவருக்கு நான் ஒரு பெண் பார்த்துத்தருவதாயும் தாராளமாக விவாகத்தைச்செய்துகொள்ளட்டும் என்றும் கடிதம் எழுதினேன். அதனால்தான் அவருக்குக் கோபம் பொங்கிவிட்டது....

மாணிக்:—ஐயையோ! தம்பீ! நீ சிறுவனாய் லக்ஷணமாயில்லாமல் அவருடன் ஏன் எதிரிட்டுக்கொண்டுபோகிறாய்? எந்நாளிலும் அவர் இதேபோக்கில்தானே இருக்கிறார். உன் பாட்டியிருக்கையிலேயே அவருக்குக்கூட அடங்காத உன் பிதா உனக்கா அடங்கிவிடுவார் என்று பார்க்கிறாய்?

தேவநா:—மாணிக்கம்! எனக்கு அவர் அடங்கிநடக்கும்படி நான் விரும்பவில்லை. க்ரகஸ்தாச்ரமத்திலிருந்து விடுதலையாகி ஆத்மரக்ஷணம் தேடும்காலத்தில் அதபாதாளத்தில் விழுவதற்குத்தான்

பறந்துதவிக்கிறாரே! அந்தச்செய்கையை அவரது நிலைமைக்கு ஏற்ற படி 30வயதான ஒரு விதவையை மணக்கும்படி துணிந்துதான் எழுதினேன். என்னபயம்? 'தலைக்கு மிஞ்சிய ஆக்கினை இல்லை, கோவணத்திற்கு மிஞ்சிய தரித்திரம்இல்லை' என்பது பழமொழி.. இதற்குத்தான் நான் துணிந்திருக்கிறேனே! எனக்கென்ன கவலை? நான் கவலைப்படுவதெல்லாம் நம் கண்மணி தேவகிக்காகத்தான். நல்ல இடத்தில் முதலில் அவளைக்கல்யாணம் செய்துகொடுத்துவிட்ட பிறகு அவர் எந்த ஆட்டம் ஆடினாலும் அவரைக் கேட்பாரே இல்லையல்லவா?

மாணிக்:—தம்பீ! நீ சொல்வதும் சரிதான். இருப்பினும் நீ அவருக்குக்கோபம் உண்டாகும்படிமட்டும் நடக்காதே. அவருடைய போக்கும் அவர் யார்யாரிடம் பெண்ணுக்காக அலைகிறார் என்பதையும் ஒன்றையும் கவனிக்காததுபோல் நான் சகலத்தையும் கவனித்துத்தான் வருகிறேன். இவர் பணம்காசு விஷயத்தில் தம் பிடிகூட ஏமாறமாட்டார் தெரியுமா? இவரிடம் பணத்தைக் கறந்துகொண்டு மொண்டி, முடம், தரித்திரம், ஊமை, வ்யாதிப் பிண்டம், உதவாக்கரை அழுகப்பிண்டம் முதலியவைகளை இவர் காலில் கட்டிவிடுவதற்காகவே தரகர்கள் இரவு பகல் அலைகிறார்கள். அதற்கெல்லாம் உன் பிதாவா மசிகிறவர். தனக்கும் பணச்செலவில்லாமல் நல்ல பெண்ணாகவும் தனக்குக் கிடைக்கவேண்டும் என்று பார்க்கிறார். இதே வேட்டையில் மனது முறிந்து விவாகமே இல்லாத நிலைமையும் உண்டாகிவிடலாம் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. நீ அவருடன் எதிரிட்டுக்கொள்ளாதேப்பா! உன் தாயாரின் சாந்தத்தை நீயும் கொஞ்சம் வகித்து உன்பிதாவிடம் நல்ல பெயரெடுத்துக்கொள்ளு...என்று புத்திமதிகள் கூறினாள்.

தேவநாதன் எத்தகைய பதிலும் சொல்லாமல் வெளியே போய்விட்டான். இன்று நடந்தவிவரம் எதுவும் தேவகிக்குத் தெரியாது. தகப்பனாரிடம் பயமும் இருக்கிறது, செல்லமும் இருக்கிறது; ஆகையால், ஒருசமயமில்லை என்றாலும் ஒருசமயம் கொஞ்சிப்பேசுவாள். அன்றும் பள்ளிக்கூடத்திலிருந்து வரும் போதே வெகுவெகு ஆவலுடன் ஒரு முக்யமான விஷயத்தைப் பற்றித் தன் பிதாவிடம் கேட்பதற்காக வந்துபார்த்தாள்; அவர் இல்லாததால் அவர் வரவுக்குக் காத்திருந்தாள்.

சிறிது நேரங்கழித்து தகப்பனார் வந்ததும் உள்ளே ஓடிச் சென்று "அப்பாப்பா! அண்ணாவுக்குக் கல்யாணமாப்பா! நீபோய் எங்க டீச்சருடைய உறவுவிட்டில் பெண்பார்த்தாயாமே?"..என்று சொல்லிமுடிப்பதற்குள் ஆவேசத்துடன் பளீர் பளீர் என்று முதுகில் நான்கறைவிட்டு இழுத்துத்தள்ளும்போது தற்செயலாகப் பார்த்துக்கொண்டு வந்த மாணிக்கம் தேவகியைத்தாங்கி அழைத்துக் கொண்டு சமயல்கட்டிற்குச்சென்று விம்மி விம்மி அழும் தேவகியைச் சமாதானப்படுத்தி "அழாதேம்மா! தாயுடன் போச்சு பிறந்தகம், தேருடன் முடிந்தது திருநாள்'....தாயற்ற பிறந்தகமும் தன்

கணவன் அற்ற புக்ககமும் நரகம்' என்ற பழமொழியை நீ அறிய வேணும்! அனுவசியமாக அப்பாவுடன் பேசாதேம்மா!" என்ருள்.

தேவகி:—ஏன் பேசக்கூடாது மாணிக்கம்? அப்பா போய் பெண் பார்த்த விஷயத்தை டீச்சர் என்னிடம்சொல்லி மகிழ்ந்தார். அண்ணுவுக்குக் கல்யாணமென்ருல் எனக்குச் சந்தோஷமில்லையா? அதைத்தான் ஆவலாகக் கேட்டேன். அதற்கா இப்படி அடிப்பது?..

மாணிக்:—கண்ணு! உனக்கு வயது அதிகம் ஆகாததால் லோக விஷயம் தெரியவில்லை. உங்கப்பா பெண்பார்த்தது அண்ணனுக்

கல்லம்மா! அவருக்கேதான் பெண்பார்த்திருக்கிறார்...என்றதும் தேவகி அலறியவாறு "என்ன! என்ன! அப்பாவுக்கா கல்யாணம்? அவருக்கா என்னைப்போல் சிறுமியைப் பார்த்தாராம். நிஜமாகவா? அவர்களிடம் அப்பா தனக்கென்று சொல்லாததால் அண்ணனுக்கு என்றுதானே அவர்கள் நினைத்துப் பேசுகிறார்கள்—என்றாள்.

மாணி:—உஸ்..இரையாதேம்மா! அப்பா உள்ளே இருப்பதை மறக்காதே. மறுபடியும் வந்துவிடப்போகிறார்...என்று அடக்கிச் சமாதானம் செய்தாள். என்ன இருந்தாலும் அவளுடைய சிறிய இளந்தளிர் போன்ற உள்ளத்தில் இந்த விஷயம் ஆணி பொத்துவது போல் தைத்தது. "என்னைப்போன்ற சிறுமிக்கா அப்பா கணவனாவது!" என்கிற வியப்பு அலைமோதியது.

8

மேலே எத்தகைய அதிர்ச்சியுமின்றி ஒருவாரம் எப்படியோ உருண்டுவிட்டது. தேவகியுடனோ தேவநாதனுடனோ சர்மா பேசவே இல்லை. அதனாலேயே அமைதி நிலவி இருந்தது. சர்மா அடிக்கடி ஊருக்குப் போகும் வழக்கம்போல் போய்விட்டார்.

ஒருநாள்காலையில் தேவகியும் தேவநாதனும் குளித்து காலை ஆகாரம் செய்துவிட்டுப் பத்ரிகை படித்துக்கொண்டிருக்கையில் வீதியில் ஒரு பிச்சைக்காரி வெகு ஆநந்தமாகப் பாடிக்கொண்டு போகும் குரலைக் கேட்டதும் வியப்புடன் "அண்ணா! பிச்சைக்காரியின் சாரீரத்தையும் பாடும் அழகையும் பார்த்தாயா! ரேடியோவில் சிலசமயம் சிலர்பாடும்போது ரேடியோவையே மூடிவிடலாம் போலிருக்கிறது. சில சினிமாக்களில் அலறும் அலறல் காதாலேயே கேட்கமுடியவில்லை. இம்மாதிரி பிச்சைக்காரிகள் இயற்கையாக பகவான் கொடுத்த வித்தையைத் தன்போக்காகப் பாடுவது எத்தனை சுகமாக விருக்கிறது? இத்தகையவர்களுக்கு நல்ல ஆதரவு கொடுத்து வ்ருத்திசெய்தால் எத்தனை உயர்வாக விருக்கும்?...என்று பேசிக்கொண்டே இருவரும் வீதிப்பக்கமுள்ள மாடி பால்கனியில் நின்று பார்த்தார்கள்.



காலணா பிச்சைபோடாமலேயே ஜனங்கள் கூட்டம்கூட்டமாகப் பாட்டைக்கேட்டு விமர்சனங்களைக் கொட்டியளந்தவாறு சென்றனர். தேவநாதனும் தேவகியும் மாடியிலிருந்து ஒரு ரூபாய் காசைப் பிச்சைக்காரிக்குப் போட்டு, அவள் இனிய கானத்தைக் கேட்டுக்கொண்டே நிற்கையில் பேய்ச்சூச்சல் போடுவதுபோல் பெரியதாக இரைந்துகொண்டு ஒரு பெரிய கார் வந்துநின்றது.

என்ன ஆச்சரியம்! வெகு ரூபலாவண்யமுள்ள ஒரு பெண்மணி முன்னே இறங்கினாள். சர்மா சரிகைவேஷ்டி பளபளப்பாய் மின்ன பின்னால் இறங்கினார். மகா யூகசாலியான தேவநாதன் கூர்ந்து கவனித்தான். இருவருடைய கைகளிலும் கங்கணம் கட்டியிருப்பதையும் அந்தப் பெண்ணின் கழுத்தில் புதிய மஞ்சள் சரடு பச்சைப்பசேலென்று மின்னுவதையும் கண்ட உடனே பளிச்சென்று விஷயம் புரிந்துவிட்டது.

“தேவகி! அப்பா மறுவிவாகம் செய்துகொண்டு புதுமனைவியுடன் வருகிறார் பார்த்தாயா!”...“என்ன! மறுவிவாகமா? ...அப்பாவின் மனைவியா அந்தச்சிறுமி? இருக்காது அண்ணா!”...என்று இவர்கள் குழம்பியும் வியப்புற்றும் தவிப்பதற்குள் அவ்விருவரும் உள்ளே வந்துவிட்டார்கள். முன்கட்டுகூடத்தில் நின்றிருக்கும் மாணிக்கமும் இவர்களைப்பார்த்து ஒன்றுமே புரியாது விழிக்கிறாள்.

இதற்குள் பெட்டி, படுக்கை எல்லாவற்றையும் ட்ரைவர் உள்ளே கொண்டுவைத்தான். படுக்கையைப் பார்த்தால் புதிதாக இருந்ததுகண்டு, பின்னும் அடங்காத ஆச்சரியத்துடன் நிற்கையில் சர்மா “அடேய் முத்து; இங்குவா! இந்த பெட்டி படுக்கையை மாடியில் என் அறையில் கொண்டுவை. அதற்குப்பக்கத்து அறையை சுத்தமாகப் பெருக்கிவை...மாணிக்கம்! எஜமானியம்மாளுக்கு வேண்டியவைகளைச் செய்து நன்றாகக் கவனித்துக்கொள். வா. கலாவதி!” ..என்று கூறியபடி அந்தப் புதிய மனைவியின் கையைப் பிடித்து வெகு அன்புடன் மாடிக்கு அழைத்துச் சென்று தனியறையில் உட்கார வைத்து “கலாவதி! இதை உன்னுடைய தனியறையாக உபயோகித்துக்கொள்ளு” என்று காட்டினார்.

கலாவதிக்கு புதிய இடமாகையால் வெட்கமும், ஏதோ மாதிரியான சங்கோஜமும் பாதித்ததால் சற்று மவுனமாகவிருந்தாள். பிறகு “இங்கு வீட்டில் யாருமே இல்லையா! அந்த கிழவி ஒருத்திதான் இருக்கிறாளா?” என்றாள்.

சர்மா ஒருமாதிரி சிரித்து அசடுவழிய “ஹி...ஹி...உனக்குத் துணைக்கு யாருமில்லை என்று நினைக்கிறாய்! பாட்டுவாத்யாரம்மாள்; படிப்புவாத்யாரம்மாள். தையல் வாத்யாரம்மாள், மூவரும் மணிப்ரகாரம் வருவார்கள். அவைகளைக் கற்றுக்கொண்டு மற்றதை கவனிக்கவே உனக்குப் போது போதாது கலாவதி!” என்றார்.

கீழே ஓடுவதற்காகக் கிளம்பிய தேவகியை தேவநாதன் தடுத்து தன்னறைக்கு அழைத்துச் சென்று “தேவகி! நான் ஏற்கெனவே சொல்லிக்கொண்டிருந்த விஷயம் நடந்தேறிவிட்டதால் நம்

முடைய வாழ்வுக்கும் ஏதோ மாறுதல் கட்டாயம் நடந்தே தீரப் போகிறது. நீ ஒன்றுமறியாத பேதை. அப்பாவிடமோ, வந்துள்ள யுவதியிடமோ ஜாக்ரதையாகப் பழகு. உலகத்தில் மூத்தவள் குழந்தைகளின் வாழ்க்கையையும் இளையவள் ஆட்சியின் பயங்கரத்தையும்பற்றி பிறர் சொல்லக் கேட்டிருக்கும்போதே என் மனம் நடுங்கும்; அந்த அனுபவத்தை பகவான் நமக்கே ப்ரத்யக்ஷமாகக் காட்டத்தொடங்கிவிட்டார். "முழங்கையில் பட்ட சுகமும் மூத்தாள் மக்கள் வாழும் வாழ்வும்." என்பது பழமொழி. தேவகி! ஜாக்ரதையாக நடந்துகொள்ளு" என்று அவன் முடிப்பதற்குள்

"என் அண்ணு! அப்பாவின் மனைவி நமக்கு அம்மா வல்லவா! அவளை அம்மா என்றுதானே கூப்பிடவேண்டும்? அப்பா ஏன் கல்யாணத்திற்கு நம்மை அழைத்துபோகாமல் ரகஸியமாய்செய்துகொண்டு வந்திருக்கிறார்!"...என்று குழந்தைத்தனமாகவே கேட்டாள்.

தேவநாதனுக்கு ஒருபுறம் தகப்பனார்மீது ஆத்திரமும் தங்கையின் எதிர்காலத்தை எண்ணி மனக்கவலையும், தகப்பனுரை மணந்துள்ள நங்கையின்பால் பச்சாத்தாபமும் ஒன்று கூடி அவனை வதைத்ததால் பதில் பேசாது ஆழ்ந்த யோசனையில் தம்பித்து நின்றான். உடனே எதையோ எண்ணியவனாய், "தேவகி! அதோ அப்பாவும் அவர் மனைவியும் மாடி அறைக்கு வந்துவிட்டார்கள். நான் போய் அவர்களை நமஸ்கரிக்கப்போகிறேன். நீயும்வா" என்று ஆவேசத்துடன் கூறியவாறு தடதடவென்று நடந்தான். கூடவே தேவகியும் ஓடி வந்தாள். சர்மாவும் இந்தபுதிய பெண்ணும் சற்றும் எதிர்பாராதவிதம்..."அப்பா!—சித்தி!...நமஸ்காரம். இந்த இளம்பெண்ணுக்காக ஆண்டவன் அப்பாவுக்கு சென்ற 50 வயது போக இன்னும் 50 வயதைக் கொடுத்து ரக்ஷிக்கவேண்டி அவன் தலைவணங்குகிறேன்"....என்றான்.

சர்மா இத்தகைய ஒரு சம்பவம் நடக்கும் என்று நினைக்கவே இல்லை. உண்மையில் இந்த செய்கை அவரை ஒருமுழ உயரம் தூக்கிவாரிப்போட்டது. கண்கள் சிவந்து முகம் ரத்தம்போலாகிவிட்டது. ஸோபாவில் உட்கார்திருந்த கலாவதி திடுக்கிட்டு எழுந்து நின்று திருகத்திருக விழித்தவாறு சர்மாவைப்பார்க்கிறாள். தேவநாதனைப்பார்க்கிறாள். தேவகியைப்பார்க்கிறாள். 50 வயதாகிவிட்டதா..!"என்று ஒரு எண்ணம் மின்஬ாரம்போல் தாக்குகிறது...இத்தனையையும் அடக்கிக்கொண்டு சர்மாவைப் பார்த்து... "இவர்கள் யாரு?" என்று வீணையின் எழில்நாதத்தைவிட இனிமையான த்வனியில் கேட்பதைக்கண்ட தேவகியின் உள்ளத்தில் ஆச்சரியமும் ப்ரமிப்பும் உண்டாயின.

சர்மா பதில் சொல்வதற்குள் தேவநாதன் சற்று படபடப்புடன் "தாயே! நாங்கள் இவருடைய மக்கள்தான். என்னுயிர் அன்னை அமர்ந்து செங்கோல் நடத்திய சிம்மாஸனத்திற்குத்தான் தங்களை முடிசூட்டி அரசியாக அழைத்துவந்திருக்கிறார். இவள் என் தங்கை. தேவகி"...என்று சொல்லிமுடிப்பதற்குள் கலாவதி ப்ரமிப்புடன்,

"உங்கள் மக்களா! பசங்களே இல்லை என்று சொன்னீர்களே!..." என்று சர்மாவைச்சற்று பதட்டத்துடன் கேட்டாள்.

இதற்குள் கதிகலங்கி நிற்கும் சர்மா தேவநாதன் பேச்சினால் தூண்டப்பட்டு விபரீதமான கோபத்தை யடைந்து கண்ணு மண்ணு தெரியாத ஆவேசத்துடன் தேவநாதன் கன்னத்தில் பளீர் என்று அறைந்து "மடையா உன்னையார் இங்கு வரச்சொன்னது? அதிகப்ரஸங்கிதனமா செய்கிறாய்?" என்று கர்ஜித்துக் கழுத்தைப் பிடித்துத்தள்ளினார்.

இந்த விபரீதச்செய்கையைக் கண்டு தேவகி க்ரீச் என்று கத்தி விட்டாள் பாவம்! அப்போதுதான் புதிதாக வந்துள்ள கலாவதிக்கு இந்த பயங்கரமான சம்பவத்தைக்கண்டும் கேட்டும் குடல் நடுங்கி யது. தன் கைகளால் கண்களை இறுக மூடிக்கொண்டு கூவென்று கத்தினாள். இந்த தடபுடலைக்கேட்ட மாணிக்கம் ஓடிவந்தாள்.

"அப்பா! இந்த அநியாயம் உங்களுக்குத்தகுமா! அண்ணாவை இப்படியா அடிப்பது? அவன் சின்னகுழந்தையா! எங்கள் தாயா ருடைய ஸ்தானத்திற்கு மற்றொருத்தி வந்த நிமிஷமே எங்களுக்கு இந்த தண்டனையா!" என்று தேவகி தன்னையுமறியாது பெரி தாகக் கத்திபவாறு தேம்பித் தேம்பி அழுதாள்.

"ராக்ஷஸீ! அண்ணனுடைய அடாத செய்கையை அறியத் தெரியாத நீ எனக்கு புத்தி சொல்ல வந்துவிட்டாயா? கழுதை! இந்தபக்கம் வந்தால் தெரியும் சேதி. ஓடு, ஓடு" என்று இரண் டறைகள் விட்டு அவளது அறைவரையில் கொண்டு தள்ளினார்.

தேவநாதன் தனக்குக் கிடைத்த அறைகளை வாங்கிக்கொண்டு கண்ணீர் பெருக அப்போதே போய்விட்டதால், மாணிக்கம் வழிமறித்து தேவகியைத் தாங்கிக் கொண்டாள். அவள் பழய காலத்து மனுஷியாதலால் தேவகியின் நிலையைக் கண்டவுடனே பழையநினைவுகள் பளிச்சென்று வந்துவிட்டன. கண்ணீரை அடக்க முடியாது பெருகுகிறது. வாய்திறந்து பேசவும் முடியவில்லை. "தாயில்லாக்குழந்தைகளுக்கு இந்த கதியா!" என்ற நினைப்பு அவள் இதயத்தை உலுக்கியது.

கலாவதியின் நிலைமை உண்மையில் கதிகலங்கிவிட்டது. "ராஜ வடிவமுள்ள பெண்ணும் பிள்ளையும் இத்தனை பெரியவர்கள் இருக் கும்போது 50 வயதாகியும் பொய்யைச் சொல்லியா இந்த காரி யத்தைச் செய்திருக்கிறார்?" என்கிற நினைப்பே அவள் இதயத்தை முற்றுகையிட்டு மல்யுத்தம் செய்யும் தருணம் சர்மாவின் ஆத்திரத் தாண்டவத்தையும் அடாத செய்கையையும் கண்டு பின்னும் திகி லும் பயமும் பன்மடங்காகப்பெருகி அதைத் தாங்காமல் தவித்தாள்.

அவள் கண்களைப் பொத்திய கைகளை எடுப்பதற்குள் மேலே குறித்த விஷயங்கள் நடந்து தேவகியையும் தள்ளிவிட்டு வந்தார். கலாவதி கண்களை மூடிக் கொண்டு பயந்து நடுங்குவதைக் கண்டு தனது ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு கலாவதியை அணைத்த வாறு கண்களை மூடியிருந்த கைகளை எடுத்து முகத்தைத் துடைத்துப்

பின், "கலாவதி! நான் ஏதோ கோபக்காரன், ராக்ஷஸன் என்று எண்ணுகிறாயா! ஆமாம், உண்மை விஷயந் தெரியாதவரையில் அப்படி நினைப்பது சகஜந்தானே. என் குடும்பத்தில் சகலமும் சரியாக இருந்தால் நான் ஏன் இந்த காரியத்தில் ப்ரவேசிப்பேன்? இந்த வெட்கக்கேட்டை எதற்காக உங்களிடம் சொல்லவேண்டும் என்பதனால் நான் எனக்கு மக்களே இல்லை என்று சொல்லிவைத்தேன். என் முதல் மனைவிக்கு திடீரென்று பயித்தியம் பிடித்துவிட்டது. அந்த நிலைமையிலேயே இந்த இரண்டு பாபப்பிறவிகளும் பிறந்து பயித்தியமாகவே இருப்பதால் இந்த கோராமைகளைக் கண்டு சகிக்காமல் நான் எப்படியோ பொறுத்துத் தான் வந்தேன்.

மனிதனின் பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு அல்லவா? என்னுடைய கவுரவத்திற்கும் உத்யோகத்தின் பெருமைக்கும் ஏராளமான செல்வத்தின் செழிப்புக்கும் வேண்டி நான் உன்னை மணந்து வந்தேன். அவனுக்குப் பயித்தியம் மட்டுமல்ல. கெட்ட எண்ணமும் துர்ப்புத்தியும் பெண்களைக்கண்டால் விகார விழிகளுடன் பார்த்துத் தீங்கிழைக்கும் த்ரோஹசிந்தையும் இருப்பதால் தான் நான் அவனை அடித்துத் துரத்தினேன்... அது கிடக்கட்டும்! இதோபாரு கலாவதி!"...என்று தனது உயிர்நிலையாகிய இரும்புப் பெட்டியைத் திறந்து நோட்டுக் கட்டுகளைக் காட்டினார்.

கலாவதியின் கண்கள் இரும்புப்பெட்டியில் புகுந்ததும் முகத்தில் சடக்கென்று ஒருவித யாறுதலும் வியப்பும் சந்தோஷமும் உண்டாகி, தான் ஜென்மத்தில் இம்மாதிரி பொக்கிஷத்தைக் கண்டறியாததால் பெருமிதமான பூரிப்பு உண்டாகி அப்படியே நிலைத்துவிட்டாள். அவளது கண்கள் அந்த நோட்டுக்களாகிய கடவுள்மீது அப்படியே பதிந்துவிட்டன. தேகமும் அசையாது தம்பித்து நின்றது. சந்தோஷத்தின் சின்னமாக அவள் இதயத்தில் ஜெயபேரிகை யடித்தது.

வை. மு. கோ. நாவல்கள். (தற்போது கைவசமுள்ளவை)

ரூ. 4-8
வைதேகி (2 பாகம்)
ரூ. 2-8
உணர்ச்சி வெள்ளம்
அமுதமொழி (கிளேஸ்)
ரூ. 2-4
தயாநிதி
ஞானதீபம்
வாழ்க்கைத் தோட்டம்
ரூ. 2.
வானக்குயில்
ஆத்ம சக்தி
சந்தோஷ மலர்
கருணாலயம்
வாத்ஸல்யம்
மதுர கீதம்
அமுதமொழி (சாதா)
ஆசைப்ரவாகம்
வெளுத்த வானம்

தெய்வீக ஒளி
மனத்தாமரை
அமரத்யாகி
ரூ. 1-12
அனாதைப்பெண்
புகழ்மாலை
கலாநிலயம்
இதய ஒலி
சிலாசாசனம்
ரூ. 1-8
பிரதிபலன்
பவித்திரப்பதுமை
ஓவியப் பரிசு
இசைப்புயல்
காலக்கண்ணாடி
ரூ. 1-4
கோபால ரத்னம்
மகிழ்ச்சி உதயம்
க்ருபாமந்திர்
புதுமைக்கோயில்

ரூ. 1-2
படகோட்டி
அபராதி
ரூ. 1.
வீரவஸந்தா
நளினசேகரன்
மாலதி
வத்ஸகுமார்
பிரார்த்தனை
பிரதிக்ஞை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
தபால் விநோதம்
இனிய முரசு
ஆண்டவனின் அருள்
அணா. 12.
பக்ஷமாலிகா
சுடர்விளக்கு
அணா. 6.
உளுத்த இதயம்

சிரிப்பும் உபசரிப்பும்.

(வஸுமதி ராமஸ்வாமி)

"வாம்மா கலா! மாமியை அடியோடு மறந்துபோனாயென்றல்லவா நினைத்தேன். வருஷப்பிறப்புக்குமுன் வந்தது; மாதம் நான்காகப் போகிறதே!" என்றாள் சாவித்திரி அம்மாள் அன்புடன்.

"என்னசெய்வது மாமி! கல்யாணத்தின் மேல் கல்யாணம் ஊர் ஊராகப் போய்க்கொண்டிருந்தேன். திரும்பியதும், உங்கள் நினைவுதான்; அவகாசமே இல்லை.... அட, கமலாகூட வருகிறாளே. அவளையும் பார்க்க விருப்பமாக இருந்தது....என்ன கமலா! வரும்பொழுதே இப்படி தானாக சிரித்துக்கொண்டு வருகிறாயே!"

"எனக்கு இன்று சிரிப்பு அடக்கமுடியாமல்தான் இருக்கிறது. சாவித்திரிமாமியிடமாவது சொல்லிவிட்டுப் போகலாம்னு வந்தேன். நீயும் இங்கு இருக்கிறாயே. எப்பொழுது வந்தாய்?"

"உனக்கும் சிரிப்புக்கும் பொருத்தமே இல்லையே! அப்படி உனக்கும் தாங்காத சிரிப்புவரும் விஷயமென்னவோ? அதை...

"ஆரம்பித்துவிட்டாயே கலா!" என்னோடு உனக்கு எப்பொழுதும் வழக்குத்தான். நீ மட்டும் எப்பொழுதும் சிரித்துக்கொண்டிருக்கிறாயோ? அசடுமாதிரி அனாவசியமாகச் சிரித்தால் எல்லோரும் பைத்தியமென்பார்கள். நீ உன்னை மேதாவியாக நினைத்துக்கொண்டிருக்கிறாயேதவிர அநேக விஷயம் உனக்குத் தெரியவில்லை."

"கமலா! உனக்கும் விவாதம் செய்ய தலையில் கொஞ்சம்...... இருக்கிறதே! "மிகவும் துக்கமாயிருக்கும்பொழுது சிரித்துவிடு" என்கிறார் உலகமகாகவியான டாகுர். ஒருபெண் சகல ஆபரணங்களையும் அணிந்துகொண்டு சிடுமூஞ்சியாக நின்றால் நன்றாயிருக்குமா? அவள் முகத்தில் ஒரு புன்னகை இல்லாவிட்டால் சோபிதம் ஏற்படுமா? பச்சைக் குழந்தைகள் நம் மனதைக் குற்றமற்ற சிரிப்பினால்தானே வசீகரிக்கின்றன?"

"கலா சொல்வது தவறு. அவளுடைய முகராசி அவள் வார்த்தைக்கு மயங்கிவிடுகிறீர்கள். எங்கபாட்டி கதைசொல்லியிருக்கிறாள்.....த்ரௌபதி, துரியோதனன் தடுமாறி விழுந்தபொழுது சிரித்தாளாம். அந்த குரோதத்தை மனதில் வைத்துக்கொண்டுதான் பின்னால் வஸ்த்திராபஹரணம் நடத்தினானாம், தெரியுமா?"

"ஆமாம், பர்வதம்! நீ சொல்வது உண்மைதான்! நான் சொல்லும் சிரிப்புக்கும், நீ சொல்வதற்கும் ரொம்ப வித்தியாசமுண்டு. கேலிச்சிரிப்பு நீசொல்வது. அது மிகவும் அவிவேகம். ஒருநொண்டியைப்பார்த்து கேலிசெய்வது, அழகில்லாதவர்களைக்கண்டு நகைப்

பது, கீழேவிழுந்தவர்களைப்பார்த்துச் சிரிப்பது, தான் மகாமேதாவி போலும் பிறர் ஏதோ மண்டூகம் என்றும் எண்ணி நகைப்பது இவையெல்லாம் மரியாதை தெரிந்தவர்களும், பிறவியிலேயே பெரிய பண்பாடு அடைந்தவர்களும் செய்யமாட்டார்கள்."

கமலா எதற்காக அப்படி சிரித்தாளென்று கேட்காமலே நீங்களெல்லாம் நகைப்பின் தாரதம்யத்தை ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்துவிட்டீர்களே....என்றாள் சாவித்திரிமாமி.

இருவரும்:—"ஆமாம்...சொல்லு கமலா."

"நேற்று நாங்கள் ஒரு பெரிய கல்யாணத்திற்குப் போயிருந்தோம். வழக்கம்போல் மாலை வரவேற்பு. ஒரு பாடகி கேட்பாரின்றி பாடிக்கொண்டிருந்தாள். எல்லோரும் ஐந்து நிமிஷமும், பத்து நிமிஷமும் ஆண்களும், பெண்களுமாக தலையைக் காட்டிவிட்டு நழுவிக்கொண்டிருந்தார்கள். நாங்களும் திரும்பினோம். வழக்கம்போல் எங்கள் கையில் வெற்றிலை பாக்குப் பையைத் தூக்கிக் கொடுத்தார்கள். வீட்டிற்கு வந்து அதைத் திறந்து பார்க்கவில்லை. இன்று காலையில் பையை என் பெண் பத்மா திறந்து தேங்காயை எடுத்தாள். உடனே 'கிறீச்' என்று கத்தினாள். என்ன ஆபத்தோ என்று எல்லோரும் ஓடிவந்து பார்த்தோம். என்னத்தைச் சொல்வது! தேங்காய்க்கு அடியில் ஒரு எலிக்குஞ்சு இறந்து கிடந்தது. ஒரே துர்நாற்றம். ஒரு பாக்கு, ஒரு வாடின வெற்றிலை, இவைகள் தானிருந்தன. மற்ற பைகளைத் திறந்து பார்க்க ஒருவருக்கும் தைர்யமில்லை. என் பிள்ளை விஷமக்காரன் பாலு ஒரு பையிலிருந்து அழுகிக் கெட்டுப்போன ஒரு பழத்தையும் ஒரு பாக்கையும் எடுத்தான். மற்ற பைகளும் இப்படியே! இது என்ன நாகரீகமா அநாகரீகமா? இந்த பைகளில் வெற்றிலை பாக்கு போடுவதே எனக்குப் பிடிக்கவில்லை. அதை நினைத்து எங்கள் வீட்டில் சிரித்துக் கொண்டே இருக்கிறோம்."

"உண்மையாகவா கமலா எலிக்குஞ்சு இருந்தது? நீ மிகைப்படுத்திதான் சொல்லுகிறாயென்று நினைக்கிறேன். வாடின வெற்றிலையோ, அழுகின பழத்தையோ கண்டு கற்பனைசெய்துவிட்டாய்!"

"கற்பனை இல்லை கலா! உண்மையே சொல்லுகிறேன். கல்யாணத்திற்குமுன் தற்செயலாய் ஒரு எலிக்குஞ்சு பையில் புகுந்திருக்கவேணும். அதைப்பார்க்காமல் தேங்காயைத் தூக்கி அதன் மேல் போட்டிருக்கிறார்கள்."

"எனக்கு நம்புவது கொஞ்சம் சிரமமாகத்தானிருக்கிறது. கையில் வெற்றிலைபாக்கைக் கொடுத்தால் கீழே சிந்தி இறைந்து போகுமேயென்று பைகளில் போட்டுக்கொடுப்பது புத்திசாலித்தனமே: கொடுப்பவர்களுக்கு சுலபம், வாங்கிக்கொள்பவர்களுக்கும் ஸௌகர்யம். ஆனால், வரவர தங்கள் மேற்பார்வையில் பைகளில் சாமான்களைப் போடச்சொல்வதில்லை. வேலைக்காரர்களைப் போடச்சொல்வது; அவர்கள் சிரத்தையின்றி தோன்றியபடி செய்வது; கல்யாணங்களுக்கு மூன்று நாளைக்கு முன்னாலேயே போடுவது! இப்படியிருந்தால் எப்படியிருக்கும்? வெற்றிலை வாடி, பழம் அழுகிப்போவதைவிட, கொஞ்சம் சர்க்கரையைத் தட்டோடு

கொடுத்தால் வந்தவர்கள் வாயில் போட்டுக்கொள்வார்கள். முதலில் எளிதாகவும், சுலபமாகவும் இருக்கட்டுமென்று செய்ய ஆரம்பித்தது வரவர சிரத்தை குறைவால் நகைப்புக்கிடமாகிவிடுகிறது. கல்யாணங்களை இன்னும் சிரத்தையாகவும், அழகாகவும் செய்ய வேணும். கால அட்டவணை மாதிரி நடத்துவதும், இயந்திரங்களைப்போல் மனிதர்கள் வருவதும் போவதும் அலுத்துவிட்டது. செலவு செய்வது அவரவர்கள் நிலைக்குத் தகுந்தபடி செய்தாலும், உற்சாகமாகச் செய்யவேண்டாமா? 'முத்தைத் தெளித்தாலும் கல்யாணம், மோரைத் தெளித்தாலும் கல்யாணம்' என்பார்களே!"

"உனக்கென்ன அழகாய்ச் சொல்லிவிடுவாய். 'சொல்வது எளிது, செய்வது அரிது'; பெண்ணுக்கு விவாகமென்றால் பெற்றோர்களுக்கும் உற்றார்களுக்கும் உற்சாகமேது! பெற்றோர்கள் நிலைக்கு மிஞ்சி சம்பந்திகளைத் திருப்திசெய்ய சீர் செய்கிறார்கள். 'யானைமேல் சீர் வந்தாலும் யானை வால் கூழை' என்ற மனப்பான்மையுள்ள சம்பந்திகள்தான் எப்படி உற்சாகப்படுவார்கள். பெண் வீட்டுக்காரர்களுக்கு தன் நிலையை உள்ளபடி சொல்ல பயம், வெட்கம்; உபசாரத்தில் அபசாரம் வராமல் இருக்கவேணுமே யென்ற கவலை. உறவுக்காரர்களோ தொந்தரவுகள் கொடுத்துக் கொண்டிருப்பார்கள்; கல்யாண காலத்தில்தான் அவர்களுக்கு உயர்ந்த சந்தர்ப்பம். சாதாரண நாட்களில் மிகவும் சகஜமாகப் பழகும் சிநேகிதர்கள்கூட கல்யாணகாலத்தில் தங்களைப் பிரத்யேகமாக உபசரிக்கவில்லையென்று சொல்லும் குற்றச்சாட்டு. எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல் எப்பொழுதும் அன்யோன்யமாக இருக்கும் தம்பதிகளிடையும் பெண், பிள்ளை கல்யாண காலத்தில் அபிப்ராய பேதம் முற்றி மனஸ்தாபம் ஏற்படுவதுண்டு. இவைகளுக்கெல்லா மிடையில் உற்சாகமாக இருக்கணுமாம். காரியம் ஆகவேணுமேயென்றுதான் இருக்கும்."

"ஆமாம் கமலா! நீ சொல்வது அநுபவ பூர்வமான வார்த்தைதான். ஆனாலும், நம் சமூகத்தில் சில சீர்திருத்தம் முக்கியம், சாத்தியமானதும்தான். கல்யாணகாலத்தில் எல்லோரும் ஒற்றுமையாக இருக்கப் பழகிக்கொள்ளவேணும். பழைய காலத்தில் ஒரு கட்டுப்பாடு இருந்தது. அதனால் சில நன்மைகள் இருந்தன. இப்பொழுது நமக்குள் அந்த கட்டுப்பாடுமில்லை; எல்லாம் அறிந்து தெளிந்து செய்யும் ஆற்றலும் இல்லை. வௌவால் மாதிரி இருப்பதால் சிரமங்கள் விருத்தியாகின்றன.......சரி...இன்னொரு நாள் அதைப்பற்றிப் பேசுவோம். மாமி! இவைகளெல்லாம் விவாதிக்க ஆரம்பித்தால் நேரம் போய்விடும்." ["இருவரும்: "போய் வருகிறோம் மாமி."]

"இனி வெளியூர் போக வேண்டாமே? ஆடி பிறந்த பிறகாவது அடிக்கடி சந்திப்போம். மஞ்சள் குங்குமம் பெற்றுக்கொள்ளுங்களேன்!" என்றாள் சாவித்திரி மாமி. "மாமி! பையில் போடமாட்டீர்களோ" என்றாள் பயத்துடன் கமலா.

ஜகன்மோகினி	இந்தியா, ஸிலோன்.	பர்மா.	வெளிநாடு.
தனிப்பிரதி	அணா 4	0—4—6.	0—5—0.
வருடச் சந்தா	3—0—0.	3—8—0.	3—12—0.

183152
சென்னை 600 008

மகாத்மாஜி ஸேவா சங்கம்

அவ்வப்போது சங்கத்தின் அபிவிருத்தியைப்பற்றி மோகினி மகிழ்வுடன் தெரிவித்துவருகிறாள். மே இதழுக்குப்பிறகு சங்கத்தில் பலபல அம்சங்கள் நடந்திருக்கிறதைக் களிப்புடன் கூறுகிறோம்.

சங்கத்திற்கு சங்கம் நேசபாவமும் தொடர்பும் அத்யாவச்ய மல்லவா? மே மீ 25உ புதன்கிழமை புதுச்சேரி மாதர் கழகத்தின் காரியதரிசி ஸ்ரீமதி ஸாவித்திரி அம்மாள் விஜயம்செய்து அருமையாகப் பேசினார்கள். அதுசமயம் ஸ்ரீமதி பாலம்மாள், M. O. ஜானகியம்மாள் முதலியோரும் பேசினார்கள். கூட்டம் இனிது நடந்தது. வை. மு. கோ. வந்தனோபசாரம் கூறினார்.

மறுநாள், 26 உ ஸ்ரீமான் ஸ்ரீரங்கம் சடகோபாசாரியர் ஸ்வாமி ஸீதை சிறை புகுந்த சிறப்பு என்ற அத்புதமான விஷயம் பற்றி அருமையாக உபன்யாஸம் செய்தார்.

மே 29உ ஆசாரிய வினோபா பாவே சங்கத்திற்கு விஜயம் செய்தார். இசைகோஷ்டியினர் ப்ரார்த்தனை கீதம் பாட, கீதை மாணவிகள் கீதாபாராயணம் செய்தனர். பிறகு வினோபா பல முக்கிய விஷயங்களைப் பேசி சங்கத்தை ஆசீர்வதித்ததோடு, ஹிந்தி பரீக்ஷையில் தேறிய சங்க மாணவிகளுக்கு பரீக்ஷைதேறிய (சர்ட்டிபிகேட்) பத்திரத்தை வழங்கினார். ஹிந்தி உபாத்தியாயினி ஸ்ரீமதி. வித்வான் கல்யாணி மாணவிகளை வினோபாபாவேக்கு அறிமுகப் படுத்தினார். வினோபாபாவே விஜயத்தை முன்னிட்டு டாக்டர் அங்குளி மிகவும் உத்ஸாகத்துடன் உழைத்ததோடு, சிறுவர்களுக்கு ஐஸ்க்ரீம் தயாரித்து வினோபாபாவேயின் கையினால் வழங்கச் செய்தார். (ஹிந்தி வகுப்புக்காக ஒரு கரும்பலகையை ஸ்ரீமதி அங்குளி சங்கத்திற்கு அன்பளிப்பாக உதவினார்.) சங்கீத ரஸிகரான வினோபாவின் விருப்பப்படி ஸ்ரீமதி காயனபடு ஸரஸ்வதிபாய் வெகு அத்புதமாகப் பாடினார். விழா இனிது முடிந்தது.

ஜூன்மாதம் முதல்தேதி முதல் ஸ்ரீமான் பண்டித திருவாலி ராமானுஜாசாரியரால் திருக்குறள் உபன்யாஸமும் வகுப்பும் ஆரம்பிக்கப்பட்டு வாரந்தோறும் தவறாது நடைபெற்று வருகிறது. சிறிய திருமடல் உபன்யாஸங்களும் தவறாது நடைபெற்று வருகின்றன.

ஜூன்மாதம் 24-ந் தேதியன்று சங்கத்திலிருந்து 10 பேர்கள் அடங்கிய ஒரு கோஷ்டிக்கு முதியோர் கல்வி கற்பிக்கும் முறையை முதல் முதலாக (ட்ரெயினிங்கு) கல்வி இலாகாவின் அதிகாரிகள் கற்றுக்கொடுத்தார்கள். மூன்று நாட்கள் வகுப்பு நடந்தது. பெண்களுக்கு இம்மாதிரி பயிற்சியளிப்பது இதுவே முதல்தடவையாகும்.

ஜூன் 23உ ஸ்ரீ யதுநாதாச்சாரியரால் "ஸ்ரீ க்ருஷ்ணக்ரூர சமாகமம்" வெகு அத்புதமாக உபன்யஸிக்கப்பட்டது.

ஜூன் 25உ சங்கத்தில் ஸ்ரீமதி B. விஜயாள் பக்கவாத்யத்துடன் கச்சேரி செய்தார்கள்.

* ஜூலை—ஆடி மீ நிகழ்ச்சிகளின் விவரங்கள் அடுத்த இதழில்

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed and published by V. M. PARTHASARATHY at the Jaganmohini Press, 26, Car St., Triplicane, Madras. 5.
Managing Editor: V. M. SRINIVASAN, M. A., B. L.,

குஷ்டம் ★ வெண் குஷ்டம்

LEPROSY ★ LEUCODERMA.

இலவச பரீட்சை, சிகிச்சை செய்யப்படும்.

கடிதங்கள் உடனே கவனிக்கப்படவேண்டுமானால் ஆங்கிலத்தில் எழுதுங்கள். தமிழில் எழுதப்படும் கடிதங்களை புரிந்துகொள்ள முடியாது. அதனால் அவை திருப்பி அனுப்பப்படும்.

தமிழ், மலையாளம், உருது முதலிய பாஷைகளில் வெளியாகி இருக்கும் நற்சாட்சிப் பத்திரங்கள் முதலிய விவரங்களுக்கு எழுதிக்கொண்டால் இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.

ஆப்பிரிக்காவிலிருந்து பீஜி வரையில் எங்கள் மருந்து ஏராளமாக உபயோகப்படுத்தப்படுகிறது.

REDDY & Co., (Regd)

GOPALAPURAM. (E. G. Dt.) TANUKU, M. S. M.

வாழ்க்கைத் தோட்டம்

வை. மு. கோ

68.வது நவீனம்

புதிய பதிப்பு

பல மாதங்களாகக் கைவசமில்லாதிருந்த கீழ்க்கண்ட புத்தகங்கள் புதிய பதிப்புகள் வெளியாகியுள்ளன :—

வாழ்க்கைத் தோட்டம் ரூ. 2—4—0

வேளுத்த வானம் ரூ. 2—0—0

பிரதிபலன் ரூ. 1—8—0

நளினசேகரன் ரூ. 1—0—0

தேவைக்கு எழுதுங்கள்.

ஜகன்மோகினி காரியாலயம்,
சென்னை. 5.